Resered as a News Paper in Ceylon ★ ★ விலை: சதம் 15




# ஈழநாடு

EELA NADU

தேசிய தினசரி




மலர் 13 பங்குனி 2 முஹறம் 18 (16—3—71) செவ்வாய்க்கிழமை இதழ் 34

# கி. பாகிஸ்தானில் தனி ஆட்சி; முஜிபுர் ரஹ்மான் பிரகடனம்

## ராணுவ ஆட்சிக்கு எதிர்ப்பு வலுக்கிறது

டாக்கா, மார்ச் 15

கிழக்குப் பாகிஸ்தானில் ஆட்சிநிர்வாகத்தை அவாமி லீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் தாமே கையேற்றுக்கொண்டுள்ளார். ஷேக் முஜிபுர் ரஹ்மான் கிழக்குப்பாகிஸ்தானில் தனியாட்சிப் பிரகடனம் செய்வார் என்று முன்னரே எதிர்பார்க்கப்பட்டது.

யாஹ்யாகானின் ராணுவ ஆட்சிக்குப் பணியவேண்டாம் என்றும், ஒத்துழையாமை இயக்கத்தைத் தொடர்ந்து நடாத்தும்படியும் அவர் மக்களுக்கு அறிக்கை விடுத்திருக்கிறார்.

தேசிய சட்டசபையிலும் மாகாண சட்டசபையிலும் தமது கட்சிக்கு கிடைத்துள்ள பெரும்பான்மை பலத்தின் அடிப்படையில் இந்த நடவடிக்கையைத் தாம் மேற்கொள்வதாக அவர் அறிவித்துள்ளார்.

[5-ம் பக்கம் பார்க்க]

மார்க்ஸிஸ்டா, இந்திரா காங்கிரஸா

## மேற்கு வங்கத்தில் யார் ஆட்சி?

கல்கத்தா, மார்ச் 15

மேற்கு வங்காள சட்டசபைத் தேர்தலில் ஜோதி பாசு தலைமையிலான மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி 111 ஸ்தானங்களைக் கைப்பற்றியிருக்கிறது. எல்லா முடிவுகளும் இங்கு வெளிவந்துவிட்டன. இந்திரா காங்கிரஸ் 105 ஸ்தானங்களைக் கைப்பற்றியுள்ளது.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியின் இடதுசாரி ஐக்கிய முன்னணி மொத்தமாக 120 ஸ்தானங்களைப் பெற்றுக் கொண்டிருக்கிறது. இடதுசாரி ஐக்கிய முன்னணியை மேற்கு வங்க அரசை அமைக்கும்படி ஜோதிபாசுவை கவர்னர் அழைப்பாரென்று நம்புவதாக கவர்னருக்கு இடது மார்க்ஸிய கம்யூனிஸ்ட் எழுதியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளது.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சிக்கு அறுதிப் பெரும்பான்மை இல்லாததால் அவர்களை அரசு அமைக்கும்படி அழைக்கக் கூடாது என்று மேற்கு வங்க ஜகஜீவன்ராம் காங்கிரஸ் காரியதரிசி கவர்னரைக் கடிதமொன்றில் கேட்டுள்ளார். மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைத் தாம் ஆதரிக்கவில்லை

(8-ம் பக்கம் பார்க்க)

## சேகுவேரா தலைவர்கள் உட்பட 8 பேர் கைது!

### ஆயுதங்களுடன் வந்ததாக பொலிசார் கூறுகின்றனர்

கொழும்பு, திங்கள்

சேகுவேரா இயக்கத்தைச் சேர்ந்த இரு தலைவர்களையும் மற்றும் ஆறு பேரையும் இன்று பொலிசார் கைது செய்தனர்.

கொழும்பு நகரை அடுத்துள்ள பேலியகொடையில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர். ரோகண விஜயவீராவும் மகிந்தவிஜய சேகராவும்தான் கைது செய்யப்பட்ட சேகுவேரா இயக்க இரு தலைவர்களுமாவார்கள்.

இவர்கள் கைதுசெய்யப்பட்ட சமயத்தில் அவர்கள் ஆயுதங்கள் வைத்திருந்ததாகப் பொலிசார் தெரிவித்தனர். கைது செய்யப்பட்ட எட்டுப்பேரும் அம்பாரையிலிருந்து கொழும்புக்கு வந்துகொண்டிருந்ததாகவும் அவர்களைப் பின் தொடர்ந்து வந்த இரகசியப் பொலிசார் பேலியகொடையில் வைத்துக் கைது செய்ததாகவும் கூறப்படுகிறது.

(ஸி.பி.ஏ)

## அமைச்சரைக் கடத்தும் முயற்சி தோல்வி

கொழும்பு, திங்கள்

சமூகசேவை அமைச்சர் திரு தென்னக்கோனைக்கடத்திச்செல்வதற்குபுரட்சிவாதிகள் எடுத்த முயற்சியை துப்பறியும் பொலிசார் முறியடித்துவிட்டதாக 'டைம்ஸ் ஒவ் சிலோன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. பொலிசாருக்குக் கிடைத்த ரகசிய தகவலைத்தொடர்ந்து தம்புள்ளைக்கு துப்பறியும் பொலிசார் விரைந்துசென்று அமைச்சரைவேறுவழியாகக் கொழும்புக்குக் கூட்டிச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தச் சதியில்சம்பந்தப்பட்டவர்களைத் தமக்குத் தெரியுமென்று திரு தென்னக்கோன் பத்திரிகைக்குத் தெரிவித்துள்ளார். பொலிசார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

[ஸி பி]ஏ

## டாக்டர் என்.எம். இன்று வருகிறார்

யாழ்ப்பாணம், செவ்வாய்

நிதி அமைச்சர் டாக்டர் என் எம். பெரேரா இன்று காலை யாழ்ப்பாணம் வருகிறார். இன்று முற்பகல் 11 மணிக்கு ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கி கிளையை அவர் திறந்து வைப்பார்.

டாக்டர் பெரேராவுக்கு சிறப்பான வரவேற்பளிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது.

## எசலமுல்லக் கிராமத்தில் எறிகுண்டுக் குதம்

### பொலிசார் கண்டு பிடித்தனர்

கோட்டை, திங்கள்

நாடுபூராவிலும் தேசவிரோத சக்திகள் அதிகரித்துவருவதாக பொலிஸ் பகுதி அறிவித்துள்ளது. கொடிகமை எசல முல்ல என்னும் பகுதியில் கைக்குண்டுகள் வைத்திருக்கப்பட்ட பகுதியைப் பொலிசார் கண்டுபிடித்தனர். இங்கு 25 கைக் குண்டுகள் கண்டுபிடிக்கப்பட்டன. தேசவிரோத சக்திகள் நாட்டில் குழப்பம் விளைவிக்க முயல்வதாக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும்கிடைத்த பொலிஸ் அறிக்கைகள் தெரிவிப்பதாக பொலிஸ்பகுதி உயர்தரஅதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நாட்டின் பலபகுதிகளில் கைக்குண்டு, டைனமைற், துப்பாக்கி போன்றவை செய்வதற்கான பொருட்கள் கிடைக்கின்றது. அண்மையில் எசல முல்லவில் ஏற்பட்ட வெடிவிபத்து இவற்றின் நேரடியிலேயே யாகும் ... விடுத்தார். இச்சம்பவத்தில் ... இரு இளைஞர்கள் கொல்லப்பட்டனர். காயமடைந்தவர்களில் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டபின் இருவர் இறந்தனர்.

யாழ்ப்பாணத்தில் முன்னாள் யாழ்ப்பாண எம் பி திரு அல்பிரட் துரையப்பாவின் காருக்குக் கைக்குண்டு வீசியதும் இது போன்ற செயல்களும், இவ்வித தேசவிரோத சக்திகளின் செயல்களேயென்றும் அனுராதபுரம்மற்றும்இலை

(5ம்பக்கம் பார்க்க)

## லோகசபை

| | |
|---|---|
| மொத்தஸ்தானம் | 518 |
| வெளிவந்த முடிவுகள் | 515 |
| இந்திரா காங்கிரஸ் | 350 |
| காமராஜ் காங்கிரஸ் | 16 |
| தி. மு. க. | 25 |
| ஜனசங் | 23 |
| சுதந்திரா | 08 |
| இ. கம்யூனிஸ்ட் | 23 |
| பிரஜா சோஷலிஸ்ட் | 02 |
| கயேச்சை | 37 |
| முஸ்லிம்லீக் | 03 |
| மாக்ஸிய கம்யூ | 23 |
| பாரதகிராந்தி | 03 |
| சம்யுக் சோஷ | 03 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

சாவகச்சேரியிலுள்ள கோவிலொன்றிற்குப் பூசகர் ஒருவர் தேவை. குடும்பத்துடன் தங்க வீட்டு வசதி செய்து கொடுக்கப்படும். தகுந்த ஊதியம் வழங்கப்படும். தபால் மூலம் தொடர்பு கொள்ளவும். P. M. சர்மா, 43/7, கொட்டாஞ்சேனை, கொழும்பு 13. 2889

### விற்பனைக்கு

வீடு:

யாழ்ப்பாணம் இரண்டாம் குறுக்குத்தெருவில் நல்ல சுற்றாடலில் சகல வசதிகளுடன் கூடிய பெரிய வீடு வளவு விற்பனைக்கு உண்டு. விபரங்களுக்கு: 40, இரண்டாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணம். 2895

### விற்பனைக்கு

இராசிபலன்:

வருகிற விரோதிகிருது புது வருடத்திற்கு 12மாதங்களுக்கான பலன்களும், ஒவ்வொரு இராசிக்குரிய முழுப் பலன்களும். தருபவர் பிரபல சோதிடர் வே. த. மயில்வாகனம் அவர்கள். ஒரு ராசிக்குரிய புத்தகம் ரூபா ஒன்று. தபாற்செலவு சதம் 20/- மொத்த விற்பனையாளருக்கு தகுந்த கமிஷன் உண்டு. இன்றே எழுதவும். வே. த. மயில்வாகனம் சோதிடர், ஆயர்பாடி சோதிடநிலையம், மாவிட்டபுரம், தெல்லிப்பளை. 2894


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
நாகேஸ்வரராவ் - சாவித்திரி
நடித்த
மஞ்சள் மகிமை

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சிவாஜி கணேஷன்
ஜெயலலிதா
நடித்த
எங்கிருந்தோ வந்தாள்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெய்சங்கர் - லெட்சுமி
முத்துராமன் - நிர்மலா
நடித்த
வீட்டுக்கு வீடு

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சரோஜாதேவி - நாகேஷ்
நடித்த
கலங்கரை விளக்கம்

இன்று முதல்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்களில் 4 காட்சிகள்
கல்கியில் 'சோ' எழுதிய 'யாரோ இவர் யாரோ'
தொடர்கதை முழுநீள ஹாஸ்ய படமாக.



ஜெய்சங்கர் - வாணிஸ்ரீ
சோ - மனோரமா - வாசு
நடித்த
ஆயிரம் பொய்

கெப்பிட்டல் (கொழும்பு)
விஜயா (மட்டக்களப்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

வெகு விரைவில்
கெப்பிட்டல் (கொழும்பு) பிளாசா
வெலிங்டன் (யாழ்நகர்)
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## யாழ்ப்பாண மாநகர சபை

### கேள்வி அறிவித்தல்

### பண்ணை மீன்சந்தைக் குத்தகை - 1971

1-4-1971 தொடக்கம் 31-12-1971 வரை பண்ணை மீன் சந்தைக்கான கேள்விகள், யாழ்ப்பாணம் மாநகர சபை ஆணையாளரால் 22-3-1971-ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 3-00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விகள் யாழ்ப்பாண மாநகரசபை அலுவலகத்திலிருந்து கேள்விப் பத்திரப் பணமாக ரூ. 5/-ம், கேள்வி வைப்புப் பணமாக ரூ. 50/-ம் செலுத்திப் பெறக்கூடிய மாதிரிப் படிவங்களில் தயாரிக்கப்பட்டனவாகவும், அரக்கு முத்திரையிடப்பட்டனவாகவும் இருத்தல் வேண்டும். கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அல்லது சபையின் கேள்விப் பெட்டியில் போடுதல் வேண்டும்.

கேள்விப் பத்திர மேலுறையில் பண்ணை மீன் சந்தைக் குத்தகை - 1971 எனத் தெளிவாக எழுதப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் 22-3-1971 திங்கட்கிழமை ந. ப. 12-00 மணி வரை அதற்குரிய பணத்தைச் செலுத்தியதின் பேரில் வழங்கப்படும்.

இதர விபரங்களை நேரில் வந்து அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சிமன்றம்,
யாழ்ப்பாணம்.
15-3-71. 3209

## சூட்டாராம்

கைதடி, திங்கள்

மாடு கொண்டு சென்றபோது ஒரு கோஷ்டியினர் துப்பாக்கியால் சுட்டதாகவும், இதனால் மாடு இறந்துவிட்டதாகவும் கைதடியைச் சேர்ந்த பிள்ளையன் என்பவர் கிராமசேவகரிடம் புகார் செய்துள்ளார்.


நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
தினசரி 6-30 9-30
போயா நாட்கள் 2-30
ஜெமினி - கே. ஆர். விஜயா
நடித்த
தேன் மழை

வெஸ்லி சினிமா
காணிப்பாய்
தினசரி 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர் - சரோஜாதேவி
நடித்த
பெற்றால்தான் பிள்ளையா

MANOHARA
Jaffna
Daily 4-45, 7-00 & 9-45 p.m.
Poya days 4 shows
Academy award winner
best Actor
John Wayne,
Ben Johnson
in
CHISUM
(Panavision-Technicolor)

REGAL - Jaffna
Daily 3 shows
Poya days 4 Shows
Peter Sellers
Claudine Longet
in
THE PARTY


## கருணாநிதிக்கு வாழ்த்து

பருத்தித்துறை, திங்கள்

தமிழகத்தில் மிகப்பெரும்பான்மை வாக்குகளையும், ஸ்தானங்களையும் பெற்ற தி. மு. க. கட்சித்தலைவர் திரு மு. கருணாநிதியின் வெற்றியைப் பாராட்டி கோவில் கடவை கிராம முன்னேற்றச் சங்கத்தலைவர் திரு. வி. தங்கராசா ஒரு வாழ்த்துத் தந்தியை அனுப்பிவைத்துள்ளார்.

## கையிருப்பில் போதிய உணவுப் பொருட்கள்

கோட்டை, திங்கள்

சிங்கள, தமிழ் புதுவருடப் பிறப்பையொட்டி மக்களுக்கு விநியோகிப்பதற்கு தேவையான அத்தியாவசியப்பொருட்கள் கூட்டுறவு மொத்த விற்பனை ஸ்தாபனத்தின் கையிருப்பிலுள்ளதாக கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தைச் சேர்ந்த உயர் அதிகாரியொருவர் தெரிவித்துளார்.

பருப்புவகைகள், கருவாடு மிளகாய், உளுந்து வெள்ளைப்பூடு ஆகிய பொருட்கள் பங்கீட்டு முறையில் விநியோகிக்கத் தக்க அளவு கூ. மொ. வி. நிலையத்திடம் உள்ளன. சமீபகாலத்தில் நிலவிய வெள்ளைப்பூடு, மிளகாய், உளுந்து தட்டுப்பாடு ஆகியன தற்போது இறக்குமதி செய்யப்பட்டுள்ளதால் இவற்றிற்கு இனிமேல் தட்டுப்பாடு ஏற்படாது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பொதுக் கூட்டஏற்பாடு

யாழ்ப்பாணம், செவ்

அகில இலங்கை அங்கீகரிக்கப்பெற்ற தமிழ்ப்பாடசாலைகளின் ஆசிரியசங்கம் சகல ஆசிரியர்களதும் முக்கிய பிரச்னைகளான சம்பளம், இடமாற்றம், பதவி உயர்வு நியமனங்கள் பற்றிய தவறீடுகள், கற்பித்தல் மாற்றங்கள் ஆகியன குறித்து ஆலோசிக்குமுகமாக பொதுக்கூட்டம் ஒன்றினை இம்மாதம் 17ந் திகதி காலை யாழ்ப்பாணத்தில் நடத்த உள்ளது. யாழ். மலாயாகபே மேல்மாடியில் சங்கத்தலைவர் திரு எஸ் செல்லையா தலைமையில் நடைபெறவுள்ள இக்கூட்டத்தில் பல எம் பி க்களும் அரசியல் வாதிகளும் தொழிற்சங்கப் பிரமுகர்களும் கலந்து கொண்டுபேசுவர். கூட்ட ஏற்பாடுகளை செயலாளர் திரு த திருநாவுக்கரசு கவனித்துவருகிறார்.

## தட்டுப்பாடு நீங்கியது

அம்பன், திங்கள்

அம்பன் அரசினர் வைத்தியசாலையில் நீண்டநாட்களாக நிலவிவந்த மருந்துத் தட்டுப்பாடு நீங்கியுள்ளது. தற்போது மேற்படி வைத்தியசாலைக்குப் பெருந்தொகையான மருந்துவகைகளையும், குளிரூட்டிசாதனமொன்றையும் அரசாங்கம் அனுப்பிவைத்துள்ளது.

## நியமனம்

கொழும்பு, திங்கள்

'லேக்கவுஸ்' ஸ்தாபன முன்னாள் பத்திரிகையாளர் திரு. எம். ஏ. டி. சில்வா வேலைவாய்ப்பு அபிவிருத்தி அமைச்சின் பிரச்சாரப் பகுதி டைரக்டராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் சம்பந்தமாக ஆராய நியமிக்கப்பட்ட கமிஷனிலும் இவர் அங்கம் வகிக்கிறார்.

(சி. பி. ஏ.)

## ஏழைகளையே பாதிக்கும்

வெலிமட, திங்கள்

'பெற்றோல் டீசல் எண்ணெய் தட்டுப்பாடுகாரணமாக பஸ்கட்டணத்தை உயர்த்துவதனால் பாதிக்கப்படுவது ஏழைகளே. பஸ் மூலம் பிரயாணம் செய்வது ஒன்றுதான் செலவு குறைவாகவுள்ளது. அதையும் உயர்த்திவிட்டால் ஏழைகள் பாடு திண்டாட்டம் ஆகிவிடும்'.

ராகம சமாஜசேவா சங்கமயவும், ராகமபஸ் பிரயாணிகள் சங்கமும் இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவர் திரு அனில் முனசிங்காவைச் சந்தித்து தமது கருத்தைத் தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டனர்.

## புதிய டாக்டர்களுக்கு நிபந்தனை

கோட்டை, திங்கள்

புதிய டாக்டர்களாக நியமனம்பெறுவோர் இனிமேல் கிராமப்புற அரசாங்க வைத்தியசாலைகளிலேயே முதலாவதாகக் கடமையாற்றக்கட்டாயப்படுத்தப்படுவர்.

இத்தகவலை சுகாதார அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். இதனால் பின்தங்கிய கிராமப்பகுதி மக்களுக்குச் சிறந்த வைத்திய வசதிகள் அளிக்க ஏதுவாக இருக்குமென சுகாதார அமைச்சு கருதுவதாகவும் அவர் தெரிவித்தார்.

## முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், செவ்.

இந்தன்கேணி சிவச்செல்வி கலாமன்றத்தினர் வட்டுக்கோட்டை முதுதமிழ்ப்புலவர் திரு. மு. நல்லதம்பி நினைவுநாளை மேமாதம் முத்தமிழ் விழாவாகக் கொண்டாடவிருக்கின்றனர் இவ்விழாவையொட்டி பேச்சு, கட்டுரை கவிதைப் போட்டிகளும் நடாத்தவிருக்கின்றனர் போட்டிகள் யாவும் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

## ஆண்டு விழா

கோட்டை, திங்கள்

தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கத்தின் கொழும்புக்கிளை இம்மாதம் 18-ம் திகதி வியாழனன்று மாலை ஆண்டு நிறைவுவிழாவைக் கொண்டுகிறது. வெள்ளவத்தை இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவுக்கு ஸ்ரீமத் சுவாமி பிரேமாத்மானந்தஜி தலைமைவகிப்பார். கவிஞர் அம்பி, பண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி திரு. வ. நடராஜா ஆகியோர் உரையாற்றுவர்.

## கச்சதீவு படகுச்சேவை

கோட்டை, திங்கள்

இம்மாதம் 18-ந் திகதி ஆரம்பமாகவிருக்கும் கச்சதீவு மகோற்சவத்தையொட்டி இதுவரை 90 படகுகளுக்கு லைசென்ஸ் வழங்கப்பட்டுள்ளது. லைசென்ஸ் பெற்ற இப்படகுகளில் ஏற்றிச் செல்லக்கூடிய பிரயாணிகளின் தொகையும் வரையறை செய்யப்பட்டுள்ளது.

இம்முறை வள்ளங்கள் கட்டணம் உயர்த்தப்பட்டுள்ளது எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## வெட்டு

கைதடி, திங்கள்

கைதடி மேற்கைச் சேர்ந்த 62 வயதான ராமு என்பவர் பலத்த வெட்டுக்காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். சாவகச்சேரி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் எம். சின்னாண்டி என்பவரை கைது செய்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்குப்பாகிஸ்தான் நெருக்கடி

# கொள்கையில் எதையும் ஷேக் விட்டுக்கொடுக்கமாட்டார்!

## யாஹ்யாக்கான் செல்வதால் பயன் ஏற்படுமா?

டாக்கா, மார்ச் 16

பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகான், அவாமிலீக் தலைவர் சேக் முஜிபுர்ரஹ்மானுடன் பேச்சுவார்த்தை நடத்தும்பொழுது அவாமிலீக்கின் ஆதார கொள்கை எதையும் ரஹ்மான் விட்டுக்கொடுக்கமாட்டார் எனத் தெரிகிறது.

ஜனாதிபதி யாஹ்யாகான் மேற்கு பாகிஸ்தானிலுள்ள சிறு கட்சித் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு அவாமிலீக் தலைவர்களுடன் பச்சுவார்த்தை நடத்துவதற்காக டாக்கா புறப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறது.

இன்று டாக்காவில் அளித்த பேட்டி யொன்றில், யாஹ்யாகான் என்னுடன் நடத்தும் பேச்சுவார்த்தையின்போது அவாமிலீக்கினால் முன்வைக்கப்பட்ட ஆதார நெறிகளில் எதையும் குறைக்கவோ விட்டுக்கொடுக்கவோ மாட்டேன். யாஹயாகான் என்னுடன் பேச்சுவார்த்தை நடத்த எப்பொழுது வருவார் என்பது எனக்குத்தெரியாது என்றார் முஜிபுர் ரஹ்மான்.

யாஹ்யாகான் அவாமிலீக் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக டாக்கா வரும்பொழுது தனக்கு எதிராக எவ்வித ஆர்ப்பாட்டமும் செய்யக்கூடாதெனத் தன்னிடம் ஜனாதிபதி கேட்டுக்கொண்டதாகச் சொல்லப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை என ரஹ்மான் மறுத்தார். கிழக்குபாகிஸ்தான் மக்களின் சுதந்திரப்போராட்டத்தில் அவர்களுடைய பூரண உரிமைகள் அளிக்கப்படும் வரை போராட்டம் ஓயாதென்று மேலும் அவர் தெரிவித்தார்.

இதற்கிடையே மக்களால் தெரிவுசெய்யப்பட்டபெரும்பான்மைக்கட்சியுடன் ஆட்சியை ஒப்படைக்கவேண்டுமென மக்கள் கட்சித் தலைவர் சுல்பிகார் அலிபூட்டோ தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கராச்சியி நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. பூட்டோ பேசினார். அவர் அங்கு பேசுகையில், பாகிஸ்தான் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட இரு பெரும்கட்சிகளிடமும் ஆட்சியை ஒப்படைக்கவேண்டும் தேசிய சட்டசபையில் நாம் கலந்துகொள்வதற்கு அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் எவ்வித நிபந்தனையும் விதிக்கப்படாது. புதிய அரசியல் சாஸனத்தை அமைப்பதில் இரு பகுதியினரும் சேர்ந்து செயல்படுவதற்கு இன்னமும் சந்தர்ப்பம் இருக்கிறது புதிய அரசியல் சாஸனத்தை அமைப்பதில் இரு பகுதியினருக்குமிடை ஏற்பட்டிடுக்கும் கருத்து வேறுபாடுகளை நீக்குவதற்குப் போதிய அவகாசம் வேண்டும். எனவே தேசிய சட்டசபைகூடி, 130 நாட்களுக்குள் புதிய அரசியல் சாஸனத்தை அமைக்க வேண்டுமென்ற காலக்கெடுவை மேலும் நீடிக்க வேண்டும், இப்படிச்செய்யும் பட்சத்தில் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள மக்களின் ஒத்துழைப்பை நாம் பெறக்கூடியதாக இருக்கும் என்றார்.

பாகிஸ்தானிலுள்ள சிறுகட்சிகள் ரஹ்மானின் கோரிக்கைகளுக்குப் பெரும் ஆதரவை தெரிவித்திருப்பதாக அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. பூட்டோவின் போக்கிற்கு பெருத்த கண்டனம் எழுப்பியுள்ளதாகவும் சொல்லப்படுகிறது.

இதன் மத்தியில் கிழக்குப் பாகிஸ்தானில் வேலைக்குச் செல்லாதிருக்கும் அரசாங்க உத்தியோகத்தர்கள் உடனடியாக உத்தியோகங்களுக்குச்செல்லவேண்டுமென்றும் அப்படிச் செல்லாவிட்டால் அவர்கள் பதவிநீக்கம் செய்யப்படுவதோடு, தண்டனைக்கும் உள்ளாவார்களென அரசாங்கம் அறிவித்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. அவாமிலீக்கின் தலைவர் ஷேக் முஜிபுர்ரஹ்மானின் வேண்டுகோளை ஏற்று இவர்கள் வேலைக்குச்செல்லாதிருக்கின்றனர்.

கிழக்குப்பாகிஸ்தானில் சில பகுதிகளில் வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும், இராணுவத்தின் கடும் நடவடிக்கைகள் காரணமாக அப்பகுதிகளில் வன்முறைகள் ஏற்பட்டிருக்கலாமெனவும் அஞ்சப்படுகிறது.

கிழக்குப் பாகிஸ்தானில் இருந்து 4000 மேற்குப் பாகிஸ்தானியர் கராச்சி போய்ச் சேர்ந்தனர் மேலும் 3000 பேர் பிரயாணமாகக் காத்திருக்கின்றனர்.

இந்திரா காங்கிரஸ்

## 169 புதிதாகப் பெற்று 38 இழந்தது

புதுடில்லி, மார்ச் 15

நடந்து முடிந்த லோகசபைத் தேர்தலில் சில தொகுதிகள் கைமாறியிருக்கின்றன. லோகசபைக்கான 518 தொகுதிகளில் கிட்டத்தட்ட 250 தொகுதிகள் கைமாறியிருக்கின்றன. மற்றவர்கள் கையில் இருந்த பல தொகுதிகளில் பெரும்பாலான இடங்களை ஜகஜீவன்ராம் காங்கிரஸ் கைப்பற்றியுள்ளது. 169 இடங்களை மற்றக் கட்சிகளிடமிருந்து கைப்பற்றிய ஜகஜீவன்ராம் காங்கிரஸ் தம்மிடமிருந்த 38 தொகுதிகளையிழந்து தப்பவைத்துக் கொண்டுள்ளது.

நிஜலிங்கப்பா காங்கிரஸ், முன்பு தம்மிடமிருந்த 55 இடங்களைப் புதிதாகப் பெற்று 9 இடங்களைத் தப்பவைத்துக் கொண்டுள்ளது.

மேற்கு வங்காளத்தில் நடந்த சட்டசபைத் தேர்தலில் ஐக்கிய அமைச்சரவையிலிருந்த 11 மந்திரிகள் தோல்வி அடைந்துள்ளனர்.

## 13 கொள்ளைக்காரர் சுட்டுக்கொலை

புதுடில்லி, மார்ச் 16

மத்தியபிரதேசத்திலுள்ள மொரினகிராமத்தில் 13 கொள்ளைக்காரர்களைப் பொலிசார் சுட்டுக்கொலைசெய்தனர் இதுபோன்று இதற்கு முன்பு இவ்வளவு பெரிய போராட்டத்தைப் பொலிசார் நடத்தவில்லை என்று சொல்லப்படுகிறது.

மொரினகிராமத்திலுள்ள நதிக்கரையில் பொலிசாருக்கும் கொள்ளைக்காரர்களுக்குமிடையே நடைபெற்ற துப்பாக்கிச் சண்டையில், கல்யாண சிங், பாவுசிங் ஆகிய இரு பெரும் கொள்ளைக்காரர்கள் சுட்டுக்கொலைசெய்யப்பட்டனர்.

தலையைக்கொண்டுவந்தால் சன்மானம் அளிக்கப்படுமென மத்தியப்பிரதேச அரசாங்கம் அறிவித்திருந்தநான்கு கொள்ளைக்காரர்களும் இப்போராட்டத்தின்போது சுட்டுக்கொல்லப்பட்டனர்.

## ஸ்டாலின் தன் மனைவியை கொலை செய்தாராம்

பெல்கிரேட், மார்ச் 15

சோவியத் யூனியன் முன்னாள் பிரதமர் ஜோசப் ஸ்டாலின் தனது மனைவி நடேஜ்டா அலிலுயேவாவைக் கொலை செய்தார் என்றும் பிரபல எழுத்தாளர் மாக்ஸிம் கோர்க்கியைக் கொல்லும்படி உத்தரவிட்டார் என்றும் இங்கு செய்திவெளியிடப்பட்டிருக்கின்றது.

சோவியத் யூனியன் முன்னாள் பாதுகாப்புதலைமை அதிகாரி ஒருவரின் சகோதரியினால் 1939-ம் ஆண்டில் இத்தகவல் தெரிவிக்கப்பட்டதாம். இங்கு வெளியிடப்பட்டுள்ள பழைய சரித்திரக் குறிப்புகளில் இது காணக் கூடியதாக விருக்கின்றது.

சோவியத் முன்னாள் ராணுவ அதிகாரி ஹென்றி ஜகோடாவின் சகோதரி தாயிஸா கிரிகோறெவ்னா என்பவர் சைபீரியாவில்

(7-ம் பக்கம் பார்க்க)

# தமிழ்நாடு

## புதிய அமைச்சரவை

மு. கருணாநிதி—முதல்வர் நிதி திட்டமிடல் பொதுநிர்வாகம்
இரா. நெடுஞ்செழியன்—கல்வி வருமானத்துறை
க. அன்பழகன்—பொது, சுகாதாரம்
என். வி. நடராசன்—தொழில்
திருமதி சத்தியவாணிமுத்து—ஹரிஜனநலம்
ப்ா உ. சண்முகம்—உணவு உள்ளூர் நிர்வாகம்
எஸ். மாதவன்—கைத்தொழில்
சாதிக்பாஷா—பொதுத்துறை
ராஜாராம்—பின்தங்கிய வகுப்பினர் நலம்
சி பா ஆதித்தனார்—கூட்டுறவு
அன்பில் தர்மலிங்கம்—விவசாயம்
ஓ பி ராமன்—மின்சாரம்
எஸ் இராமச்சந்திரன்—போக்குவரத்து
கண்ணப்பன்—அறநிலைய பாதுகாப்பு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாக்கு

ஜீவர்களை மனம் நோகப் பேசாமலிருத்தலும், பேரன்போடு கூடிய உண்மை மொழிகளைக் கூறுதலும், வேதாகமங்களை ஓதுதலும் வாக்கினால் செய்யத்தகுந்த தவமாகும்—நீதை

# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 2ந் திகதி (16-3-71)


## உணவு விநியோகத்தில் இராணுவம்

அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விநியோகப்பொறுப்பை இராணுவத்திடம் ஒப்படைப்பதற்கான திட்டமொன்றை அரசாங்கம் பரிசீலனை செய்து வருவதாக ஒரு செய்தி கூறுகிறது. இது உண்மையானால் இதை மக்கள் நிச்சயம் வரவேற்பார்கள். அத்தியாவசிய உணவுப்பொருள்களின் விநியோக வேலைக்கு மட்டுமல்ல இதர பல சேவைகளுக்குங் கூட நமது இராணுவத்தைப்பயன்படுத்தலாம்.

வெளிநாட்டு ஆக்கிரமிப்பு ஆபத்து எதுவும் அதிர்ஷ்டவசமாக நம்நாட்டிற்கில்லை. வெளியார் ஆக்கிரமிப்பு ஆபத்து இருப்பின் நம்நாட்டின் பெரும் பணச்செலவாகும். மக்கள் பெரும் கஷ்டமடையவும் வேண்டியிருக்கும். சட்டவிரோதக் குடியேற்றம், கள்ளக்கடத்தல் ஆகியவைகளின் தடுப்பு நடவடிக்கைகளில் இராணுவம் ஓரளவு பயன்படுத்தப்படுகிறது. கள்ளக்கடத்தலையும் சட்டவிரோதக் குடியேற்றத்தையும் தடுப்பதில் இராணுவம் எந்த அளவுக்குப் பணியாற்றியிருக்கிறதென்பது வேறு விஷயம்.

இறக்குமதிசெய்யப்பட்ட சீனியில் பதினைந்து லட்சம் தொன் சீனி மாயமாக மறைந்ததாகத் தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து அதுபற்றி விசாரணை நடைபெற்றுவருகிறது. சீனிமட்டுமல்ல அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குத்தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதற்கு இப்பொருள்களின் விநியோகமுறை சீராகவும் பாதுகாப்பில்லாதிருப்பதும் முக்கிய காரணமாகக்கொள்ளலாம்.

நமது இராணுவத்திற்குப் பெரிய வேலைகள் இல்லை. போதுமான அளவு பணம் இராணுவத்துக்குச் செலவிடப்படுகிறது. வேலையில்லாதிருப்பதால் தினவெடுக்கும் தோள்களையுடைய நமது இராணுவ வீரர்கள் பொதுமக்களுடன் அடிக்கடி மோத நேரிடுகிறது.

உணவு விநியோகப் பொறுப்பை மட்டுமல்லாது பெட்ரோலியம் மற்றும் விநியோக சேவைகளையும் இராணுவத்திடம் ஒப்படைக்கலாம். இவைதவிர உணவு, உப உணவு உற்பத்திவேலைகளிலும் கூட இராணுவத்தைப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் செலவைக் குறைப்பதாயிருக்கும்.

நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களில் இராணுவத்தைப் பயன்படுத்துவதாயிருந்தால் மேலும் ஆட்களைத் திரட்டி இராணுவத்தை விஸ்தரிக்கலாம். இதன் மூலம் வேலையில்லாத் திண்டாட்டம் குறைவதற்கு வழிபிறக்கும்.

இத்திட்டத்தை அரசாங்கம் துரிதமாகப் பரிசீலனை செய்து விரைவாகச்செயற்படுத்துவது நல்லது.

## 'தமிழரதும் சிங்களவரதும் தேசிய இலக்கியம் சிலப்பதிகாரம்'

யாழ்ப்பாணம், செவ்வாய்

"இலங்கை பழைய லெமூறியாக்கண்டத்தின் ஒருபகுதியாகும். லெமூறியாக்கண்டத்தின் பெரும்பகுதி கடல் கொண்டபின் எஞ்சிய நிலப்பகுதியே இலங்கை. முதல், இடைச் சங்கங்களில் தமிழ் வளர்த்தவர்களின் சந்ததியினரே ஈழம்வாழ் தமிழ் மக்களிற் பெரும்பாலோர்"

மேற்கண்டவாறு முதலியார் செ. முத்துத்தம்பி யாழ்ப்பாணம் ரோட்டரி கிளப்பில் உரையாற்றும் பொழுது கூறினார்.

திரு. ஆர். இராஜலிங்கம் தலைமையில் புளூறிபன் ஹோட்டலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் முதலியார் மேலும் கூறியதாவது:

தமிழர்கள் முதலில் தம் மொழி, கலை, கலாச்சாரத்தினை அறியவேண்டியது அவசியம் என்பதனை உணர்ந்து தமிழ்விழா இத்தகைய கூட்டங்களை நடாத்த முன்வந்தமை நல்லதோர் முன்மாதிரியாகும். நாம் சர்வதேச உறவு கொள்ளவும் தேசிய ஒற்றுமை பெறவும் முன்னோர் மேற்கொண்ட வழிகளை அறிவதும் அவசியமாகும். இந்தவகையில் சிலப்பதிகாரம் தக்கதோர் வழிகாட்டியாகும்."

நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்னும் தலைப்பிலே சிறப்புச் சொற்பொழிவாற்றிய வித்துவான் க. கணபதிப்பிள்ளை பின்வருமாறு குறிப்பிட்டார்.

"சிலப்பதிகாரம் முடியுடைவேந்தர்கட்கும் அந்நாடுகளுக்கும்மாத்திரம் உரியது எனக்கருதுவது தவறு. இது ஈழநாட்டிற்கும் பொதுவான காப்பியமாகும். தமிழ்ப்பண்பாடு, கலைகலாசாரம் என்பவற்றைப் பேணும்நூலாகமாத்திரமன்றித் தமிழர்களும் சிங்களவரும் ஒருங்கே போற்றும் பத்தினித்தெய்வத்தின் ஒப்பற்றகாப்பியமாயும் தமிழர் சிங்களவரின் தேசிய இலக்கியமாயும் இரண்டாயிரம் ஆண்டுகளாக விளங்குகின்றது.

ஈழநாட்டில் வாழ்ந்த அடியார்க்கு நல்லாரே சிலப்பதிகாரத்திற்கு அரியஉரைகண்டவர். அவ்வுரையின்றேல் தமிழர்களின் நகரிகம் விளங்கியிருக்கவேமாட்டாது. அடியார்க்கு நல்லார் வாழ்ந்த இடம் வண்ணார்பண்ணை என்பதற்குச்சான்று இன்றுமுண்டு. அவர் நல்லூரிற் குணபூஷணச் சக்கரவர்த்தியின் முதல் மந்திரியாய் இருந்து கொண்டே அரிய உரைஎழுதினார். தமிழாராய்ச்சித் தந்தையாகிய மல்லாகம் கனகசபைப்பிள்ளை 1800 ஆண்டுகட்கு முந்திய தமிழரின் நாகரிகத்தை எழுத சிலப்பதிகார உரையே உதவியது. எனவே எத்துணையோ வழிகளில் சிலப்பதிகாரத்திற்கும் எமக்கும் தொடர்புண்டு"

திரு. சி. வாமதேவன் நன்றிதெரிவித்துப் பேசினார்.

# திரு. பண்டாரநாயக்க
# அமுல் செய்யப்படவி
## செனேட்டர் எஸ். நடேசன்

அரசாங்க மொழி மசோதா நிறைவேற்றப்பட்டபின் இப்பிரச்சினையை வட்டமேசை மகாநாட்டின் மூலமோ அல்லது அமைதியான வேறு வழியிலோ ஆலோசிக்க சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. வேலைநிறுத்தங்களால் நாட்டின் பொருளாதாரம் குலைந்தது. மந்திரிசபையிலும் வலது இடது சாரிகளுக்குள் தகராறு. இவ்வேற்றுமைகளைத் தீர்ப்பதற்கே அவருக்கு நேரம் சரியாக இருந்தது. அவரைப் பதவிக்குக் கொணர்ந்த தீவிரவாதிகள், மொழி விஷயத்தில் தங்கள் விருப்பத்தை நிறைவேற்றிக் கொண்டபின் வேறு கோரிக்கைகளையும் கேட்டதை அவர் எதிர்த்து வந்தார்.

எல்லாக் கட்சியினரும் அடங்கிய வட்டமேசை மகாநாடு கூட்ட முடியாததால் சமஷ்டிக் கட்சியுடன் பேச்சுவார்த்தை நடத்தி 'பி-ஸி' ஒப்பந்தம் செய்தார். அவ்வொப்பந்தப்படி வடக்கு கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக மொழியாக்கப்பட்டது. 15 வருடகாலம் தலத்தாபன அமைச்சராக இருந்து அனுபவம்பெற்ற அவர் பிரதேச சபைகள் அமைத்து நிர்வாகத்தைப் பரவலாக்க வேண்டிய அவசியத்தை உணர்ந்து அதையும் அவ்வொப்பந்தத்தில் சேர்த்து ஊர்ஜிதம் செய்தார். 1958-ம் வருடம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் அவர் கூறியதாவது:

சமஷ்டிக்கட்சித் தலைவர்கள் என்னுடன் பேச்சுவார்த்தை நடத்தியதில் ஒரு கண்ணியமான தீர்வு ஏற்பட்டது. மொழிப் பிரச்சினை விஷயமாக சிங்களம் மட்டுமே அரசாங்க மொழியாக இருக்கும் அதேசமயம் தமிழ்மொழியை நியாயமான அளவு பயன்படுவதாக அங்கீகரிக்கப்படும். பொதுத் தேர்தலுக்கு முன் வெளியிட்ட நமது விஞ்ஞாபனத்தில் இதையே குறிப்பிட்டிருந்தோம். பார்லிமெண்டிலும் இதையே சொன்னேன். சமஷ்டி அரசியல் கோரிக்கையைப் பொறுத்தவரை ஒற்றை ஆட்சியே இனியும் நீடிக்கும். என்றாலும் பிரதேசசபை மூலம் நிர்வாகம் பரவலாக்கப்படும். பிரதேசசபை வேண்டுமென்பதை நாம் எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறோம். இவ்விஷயம் பற்றியும் மசோதாக்கள் தயாரிக்கப்படும்போது விவரங்களை பொதுமக்கள் அறியலாம். சில வட்டாரங்களில் கிளப்பிவிடப்படும் பீதிகளுக்கு ஆதாரமில்லை என்பதை மக்கள் அறிந்து கொள்ள முடியும்.

சமஷ்டிக் கட்சியுடன் பேசியபின் சிங்களவர்களில் சிலர் விஷமத்தைக் கிளப்பி அரசாங்கத்தைத் திகைக்க வைக்க ஓர் இயக்கத்தை ஆரம்பித்தது பெரும் தோல்வியில் முடிந்தது, மீண்டும் பெருமளவு கண்யத்துடனும் சுயமரியாதையுடனும் ஏற்பட்டுவிட்டது. நம் நாட்டை எதிர்நோக்கியுள்ள பெரும் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்க்க அவ்விதம் சௌஜன்யமும் [illegible] டும்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி மகாநாடு முடிந்ததும் பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து யு.என்.பி. கடும் பிரசாரம் நடத்தியது. எம். ஈ. பி. அரசாங்கத்தை கவிழ்க்க சில யு. என். பி. தலைவர்கள் கண்டிக்கு ஒரு கண்டன ஊர்வலத்தை நடத்தினர். இதேசமயம் வடக்கே சமஷ்டிக் கட்சியினர் ஸ்ரீ எதிர்ப்பு இயக்கம் நடத்தியது. தெற்கே சிங்களவரிடையே ஆத்திரத்தைக் கிளப்ப பயன்படுத்தப்பட்டது. இதன் பயனாக பண்டா—செல்வா ஒப்பந்தம் செத்து விட்டது. மொழிப் பிரச்சினையைத் தீர்க்க அந்த ஒப்பந்தமே நியாயமான வழி என்பது திரு. பண்டாரநாயக்காவின் கருத்து.

பின்னர் 1958-ம் வருடம் வகுப்புக் கலவரமே ஏற்பட்டது. அவசரகால பிரகடனம் செய்யப்பெற்று சமஷ்டிக்கட்சித் தலைவர்கள் காவலில் வைக்கப்பட்டனர். அவ்வித நிலையில் தமிழ்மொழி (விசேஷ உபயோக) மசோதா, சில தீவிரவாதிகளின் தூண்டுதலால் நிறைவேற்றப்பட்டது. இவ்விஷயத்தை அமைதியான முறையில் வட்டமேசை மகாநாட்டின்மூலம் தீர்க்க வேண்டுமென்பது திரு. பண்டாரநாயக்காவின் நோக்கம். இதற்குத் துணையாக பிரதேசசபை மசோதா கொண்டுவர வேண்டியிருந்தது. சமஷ்டிக்கட்சி மெம்பர்கள் காவலில் இருக்கையில் இம்மசோதாவைப் பற்றி பார்லிமெண்டில் விவாதிக்கப்படமாட்டாதென்று யு. என். பி., சமசமாஜக்கட்சி, கம்யூனிஸ்ட் தமிழ்க்காங்கிரஸ் உள்ளிட்டு எதிர்க்கட்சிகளெல்லாம் ஏகாபித்து எதிர்த்தன. ஜனநாயகத்தின் அடிப்படைக்கே இது மாறுகுமென்று கருதினர். விவாதத்தில் கலந்து கொள்ளாமல் சபையைவிட்டு வெளியேறினர். பின்னர் அரசாங்கக் கட்சியினர் மட்டும் இம்மசோதாவை தாங்கள் எதிர்ப்பதாக சமசமாஜக் கட்சியினர் சபையைவிட்டு வெளியேறுகையில் தெரிவித்தனர்.

இம்மசோதாவில் திரு. பண்டாரநாயக்கா தமது கருத்தைத் தெரிவிக்கவில்லை தீவிரவாதிகளின் கருத்தையே தெரிவித்தார். தீவிரவாதிகளின் வற்புறுத்தல் மீதே 1959-ம் வருடம் நீதிமன்ற மொழி மசோதாவையும் கொண்டு வந்தார். இதற்குப் பலத்த எதிர்ப்புகள் இருந்தபினும் இது காலாவதியாகியுப் பின்னர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசாங்கம் இதை மீண்டும் கொண்டு வந்தது.

தமிழ்மொழி (விசேஷ உபயோக) மசோதாவோ நீதிமன்றமொழி மசோதாவோ பண்டாரநாயக்காவின் உண்மையான விருப்பத்தைப் பிரதிபலிக்கவில்லை. 'பண்டா-செல்வா ஒப்பந்தத்தால் நாட்டில் அமைதி ஏற்படுமென்று கண்ட சில தீவிரவாத வெறிச்சக்திகள் மிக ஏமாற்றமடைந்து ஓர் [illegible] பகத்தை ஆரம்பித்துவிட்டன. கெட்டசக்திகள் பலம்பெற்றிருந்தன. என்று திரு. பண்டாரநாயக்கா பார்லிமெண்டில் அவசரகால பிரகடனம்பற்றிப் பேசுகையில் குறிப்பிட்டார். மொழிப் பிரச்சினை பற்றி யு என் பி, சமசமாஜ, கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கைகளும் மாறிவிட்டன. கம்யூனிஸ்ட் கட்சியின் கொள்கையை 1956-ம் வருடம் பார்லிமெண்டில் திரு பீட்டர் கெனமன் தெளிவாக்கினார். "சிங்களப்பகுதிகளில் நீதிமன்றமும், நிர்வாகமும் சிங்களத்திலும், தமிழ்ப் பகுதிகளில் தமிழிலும் நடக்கட்டும். இந்நாட்டில் ஒருவர் எங்கு வசித்தாலும்சரி அவர்கள் அரசாங்கத்துடனும் நீதிமன்றத்திலும் தமது மொழியிலேயே தொடர்பு கொள்ள முடிவதாக இருக்க வேண்டும். கலந்து வாழுமிடங்களில் மொழிபெயர்ப்புக்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்றார். சமசமாஜக்கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சியும் இப்போது மொழிவிஷயமாக சுதந்திரக்கட்சியின் நிலையை ஒப்புக் கொண்டுவிட்டன.

திரு பண்டாரநாயக்காவின் கொள்கைகளைப் பின்பற்றுவதாக இப்போதுள்ள அரசாங்கம் கூறுகிறது. ஆனால் இம்முக்கிய விஷயத்தில் அவரது கருத்துக்கள் நடைமுறைக்கு வராமல் எவ்விதம் தீவிரசக்திகள் தடுத்தன என்பதையும் முடிவில் அவர் எப்படி மாண்டார் என்பதையும் கவனிக்க வேண்டும். மொழிவிஷயமாக பல கட்சிகளின் கருத்தும் மாறி மாறி, வந்துள்ளதிலிருந்து இதுபற்றி தீர்க்க எந்த ஒரு கொள்கையும் பின்பற்றப்படவில்லை என்பதும் ஓட்டுக்கள்பெறும் போட்டா போட்டியிலேயே பல கட்சிகளும் ஈடுபட்டன என்பதும் தெளிவாகும்.

### பண்டாவுக்குப் பின்

திரு. பண்டாரநாயக்காவின் மரணத்துக்குப்பின், சமஷ்டிக் கட்சியினர் 1960-ம் வருடத் தேர்தலுக்குப்பின் யு என் பியை ஆதரிக்க மறுத்தனர். பண்டா-செல்வா ஒப்பந்தத்தை எதிர்த்து கண்டிக்கு ஊர்வலம் நடத்தியது முதலியவையே இதற்குக் காரணம். தமிழ்ப் பகுதியில் பிரதேச சபைகள் கூடாதென்றும் அந்த எதிர்ப்பு ஊர்வலம் காட்டியது. இதன்பயனாக திரு டட்லி சேனநாயகாவின் அரசாங்கமும் சிம்மாசனப் பிரசங்க தீர்மானத்துக்குப்பின் கவிழ்ந்தது. சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வந்தால், மாவட்டசபையாவது கிடைக்குமென்றெண்ணி, சுதந்திரக் கட்சியை சமஷ்டிக்கட்சிஆதரித்தது. சுதந்திரக்கட்சி ஆட்சிக்கு வந்ததும் மாவட்டசபை மசோதா தயாரிக்கப்பட்டது. ஆனால் அது பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்படவில்லை. இதற்குப் பதில் நீதிமன்ற மொழிமசோதா நிறைவேற்றப்பட்டது. இதை தமிழ்க்கட்சியும், சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சியும்எதிர்த்தன. கூட்டுமுன்னணி ஆட்சி வீழ்ச்சியடைந்ததும், சமஷ்டிக்கட்சி, யு.என்.பி.யைஆதரித்தது. அத்துடன் ஓர் ஒப்பந்தம் செய்தது. கூட்டுமுன்னணியைஆதரிக்க அது மறுத்தது இயற்கையே. அந்த ஒப்பந்தப்படி, மொழிச்ச த்தை சமஷ்டிக்கட்சி ஒப் கொள்ளும் அதே சமயத் மாவட்டசபை மசோதா யும் தமிழ்மொழி உபயோ சட்டத்துக்கான 'ரெகு ஷன்' விதிகளையும் நி வேற்ற வேண்டுமென்று பாடு. இந்த விதிகள் வி திக்கப்படவேண்டிய தி தன்று கூட்டுமுன்னணிக் சிகள் எதிர்ப்பு ஆர்ப்ப டம் நடத்தின. ஏற்கென பிரதேசசபையை யு. எ எதிர்த்ததா அதற் ட்டியாக ட்டச மசோதாவையும் கூட்டு ணிக்கட்சிகள் எதிர்த்த இதன்பயனாக யு.என்.பி. சமஷ்டிக்கட்சியுடன் செ கொண்ட ஒப்பந்தத் நிறைவேற்றத் தவறி டது.

மாவட்டசபைகளை ஏ டுத்தி, தமிழ் உபயோ சட்டத்திற்கு விதிகளை தயாரித்து அமுல் செ வேண்டுமென்ற நிபந்த மீதே தாங்கள் சிங்களத் அரசகருமமொழியாக புக்கொண்டதாகவும், ஆ மேற்குறித்த இரு நிபந்த களும் நிறைவேற்றப்பட நிலையில், அரசாங்க மொ சட்டத்தையோ அல்ல தமிழ்மொழி உபயோகச் டத்தையோ தாங்கள் ஏ லை எனபது சமஷ் சியின் நிலை கும்.

இது காரணமாக விசித்திரமான அதிருப்தி மான நிலை ஏற்பட்டது. கில் எங்குமே இல்லாத அரசாங்கமொழி நாட்டி பல பள்ளிக்கூடங்களில் பிக்கப்படவில்லை. த மொழிமூலமே கல்வி கற் கப்படவேண்டுமென்ற பாடுவந்தபின், தமிழ் மா வர்களுக்குத் தமிழ்மூலமு சிங்கள மாணவருக்கு கள மூலமும் கல்வி கற் கப்படுகின்றது. இரு சா ரைக்கும் ஆங்கிலம் இர டாவது மொழியாகக் பிக்கின்றனர். சிங்களம் சாங்க மொழியாக்கப்பட் பின்பும், தமிழை போத மொழியாகக்கொண்ட ளிக்கூடங்களிலும் சிங்க கற்பிக்க எந்த அரசாங்க ஓர் ஏற்பாடும் செய்யவில் அரசாங்க மொழிச்சட்ட நிறைவேறி 12 வருடங்க கியும் வடக்கு கிழக்கு மா ணங்களில் மட்டுமன்றி, ம இடங்களிலுள்ள தமிழை போதனா மொழியா கொண்ட பள்ளிக்கூடங் லும் சிங்களம் கற்பிக்க ஏற்பாடும் செய்யப்ப வில்லை. ஏன்? சமஷ்டிக்க யின் எதிர்ப்பை ஒருகார மாகக் கூறமுடியாது. ச டிக்கட்சி அரசாங்கமொ சட்டத்தையும் எதிர்த்த அதை ஏன் அமுலுக் கொண்டுவந்தார்கள்?

இந்த அவல நிலையா தமிழ் மாணவரைவிட களத்தை போதனாமொ யாகக் கொண்ட மாணவ ளுக்கு அரசாங்க கோர் ரேஷன் உத்தியோகங்களை பெற அதிக வாய்ப்பு ளது. சிங்களம் தெரிந்த ணத்தால் பலர் வேலையி வேண்டியதாயிற்று. தமி பள்ளிக்கூடங்களில் சி ளத்தை இஷ்டபாடமாக கூட கற்பிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...பக்காவின் மொழிக்கொள்கை ...படவில்லை

## ...நடேசன்

...து இயற்கையே. அந்தஒப் ...ந்தப்படி, மொழிச்சட்டத்தை சமஷ்டிக்கட்சி ஒப்புக் ...கொள்ளும் அதே சமயத்தில் ...மாவட்டசபை மசோதாவை ...யும் தமிழ்மொழி உபயோக ...ட்டத்துக்கான 'ரெகுலேஷன்' விதிகளையும் நிறைவேற்ற வேண்டுமென்று ஏற் ...பாடு. இந்த விதிகள் விவாதிக்கப்படவேண்டிய தினத் ...தன்று கூட்டுமுன்னணிக் கட் ...சிகள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தின. ஏற்கெனவே ...பிரதேசசபையை யு. என். ... எதிர்த்ததா[illegible] அதற்குப் ...ட்டியாக ம[illegible]வட்டசபை ...மசோதாவையும் கூட்டுமுன் ...னணிக்கட்சிகள் எதிர்த்தன. ...தன்பயனாக யு.என்.பி.யும் ...மஷ்டிக்கட்சியுடன் செய்து ...ாண்ட ஒப்பந்தத்தை ...றைவேற்றத் தவறிவிட் ...டது.

...மாவட்டசபைகளை ஏற்ப ...டுத்தி, தமிழ் உபயோகச் ...சட்டத்திற்கு விதிகளைத் ...தயாரித்து அமுல் செய்ய ...வேண்டுமென்ற நிபந்தனை ...யோடே தாங்கள் சிங்களத்தை ...அரசகருமமொழியாக ஒப் ...புக்கொண்டதாகவும், ஆனால் ...மேற்குறித்த இரு நிபந்தனை ...களும் நிறைவேற்றப்படாத ...நிலையில், அரசாங்க மொழிச் ...சட்டத்தையோ அல்லது ...தமிழ்மொழி உபயோகச்சட் ...டத்தையோ தாங்கள் ஏற்க ...வில்லை எனப[illegible] சமஷ்டிக் ...கட்சியின் நிலை[illegible]கும்.

...இது காரணமாக ஒரு ...விசித்திரமான அதிருப்திகர ...மான நிலை ஏற்பட்டது. உல ...கில் எங்குமே இல்லாதபடி ...அரசாங்கமொழி நாட்டிலே ...பல பள்ளிக்கூடங்களில் கற் ...பிக்கப்படவில்லை. தாய் ...மொழிமூலமே கல்வி கற்பிக் ...கப்படவேண்டுமென்ற ஏற் ...பாடுவந்தபின், தமிழ் மாண ...வர்களுக்குத் தமிழ்மூலமும், ...சிங்கள மாணவருக்கு சிங் ...கள மூலமும் கல்வி கற்பிக் ...கப்படுகின்றது. இரு சாரி ...னருக்கும் ஆங்கிலம் இரண் ...டாவது மொழியாகக் கற் ...பிக்கின்றனர். சிங்களம் அர ...சாங்க மொழியாக்கப்பட்ட ...பின்பும், தமிழை போதனு ...மொழியாகக்கொண்ட பள் ...ளிக்கூடங்களிலும் சிங்களம் ...கற்பிக்க எந்த அரசாங்கமும் ...ஓர்ஏற்பாடும் செய்யவில்லை. ...அரசாங்க மொழிச்சட்டம் ...நிறைவேறி 12 வருடங்களா ...கியும் வடக்கு கிழக்கு மாகா ...ணங்களில்மட்டுமன்றி, மற்ற ...இடங்களிலுள்ள தமிழைப் ...போதனுமொழியாகக் ...கொண்ட பள்ளிக்கூடங்களி ...லும் சிங்களம் கற்பிக்க ஓர் ...ஏற்பாடும் செய்யப்பட ...வில்லை. ஏன்? சமஷ்டிக்கட்சி ...யின் எதிர்ப்பை ஒருகாரண ...மாகக் கூறமுடியாது. சமஷ் ...டிக்கட்சி அரசாங்கமொழிச் ...சட்டத்தையும் எதிர்த்தது. ...அதை ஏன் அமுலுக்குக் ...கொண்டுவந்தார்கள்?

...இந்த அவல நிலையால், ...தமிழ் மாணவரைவிட, சிங் ...களத்தை போதனுமொழி ...யாகக் கொண்ட மாணவர்க ...ளுக்கு அரசாங்க கோர்ப்ப ...ரேஷன் உத்தியோகங்களைப் ...பெற அதிக வாய்ப்பு உள் ...ளது. சிங்களம் தெரியாத கார ...ணத்தினால் பலர் வேலையிழக்க ...வேண்டியதாயிற்று. தமிழ்ப் ...பள்ளிக்கூடங்களில் சிங்க ...ளத்தை இஷ்டபாடமாகவும் ...கற்பிக்கவில்லை. இத ...னல் தமிழ்ப்பள்ளிமாணவர்களுக்கு வேலைவாய்ப்புகள் பெரிதும் குறைந்தன.

இதற்கு மற்றுமொரு காரணம், தமிழ்மூலம் சிங்களம் கற்பிக்க தகுந்த ஆசிரியர்கள் இல்லாதது. இவ்வித ஆசிரியர்களைப் பயிற்றவும் எதுவும் செய்யப்படவில்லை. சிங்கள மாணவருக்குத் தமிழை இஷ்டபாடமாகக் கற்பிக்கவும் ஏற்பாடு செய்யப்படவில்லை.

[தொடரும்]

## றப்பர் வர்த்தகததில் மெற்றிக் முறை

கோட்டை, திங்கள்

றப்பர் மெற்றிக் முறையைப் பயன்படுத்தி உலக சந்தையில் விற்கப்படவிருக்கிறது. சிங்கப்பூர், மலேசியா ஆகிய இடங்களில் இந்த மெற்றிக் முறையே பயன்படுத்தப்படுவதால் இலங்கைக்கும் தனது றப்பரை இந்த முறையில் விற்பது கூடிய பலனைத் தரும் எனக் கருதப்படுகிறது.

கைத்தொழில் விஞ்ஞான விவகார அமைச்சு மேற்படி மெற்றிக் முறையை நிதியமைச்சுக்கு சிபார்சு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

ஆசிரியருக்கு கடிதம்

## சிவாஜி பிரியர் எழுதுகிறர்

தி. மு. க. ஆட்சிக்கு வந்ததால் சிவாஜியின் நிலை தர்மசங்கடம் (நமது சென்னை நிருபர்) என்று 12-3-71-ல் 'ஈழநாடு' பத்திரிகையில் செய்தி வெளியாகியுள்ளது. அதில் இருக்கும் சில விஷயங்கள் வேடிக்கைக்குரியவை. அவற்றில் ஒன்று தி. மு. க. ஆட்சிக்கு எதிராக சிவாஜி தேர்தல் பிரசாரம் செய்ததும் இப்போது தி. மு. க. அதிகபெரும்பான்மையுடன் ஆட்சிக்குவந்திருப்பதனுல் சிவாஜியின் சினிமா 'சான்ஸ்' அதிகம் பாதிக்கப்படும் என்றும் பொருள் பதிந்த விஷயம் இருந்தது. அதற்கு மட்டும் ஒரு சில உதாரணங்களைக்காட்டுகிறேன்.

1967-ம் ஆண்டிலிருந்து சட்டசபை கலைக்கப்படும் வரை தமிழக அரசால் சிவாஜி கணேசனுக்கு எந்த விதமான லாபமும் மதிப்பும் கிடைக்கவில்லை. மாருக எதிர்ப்புகளேதான் கிடைத்தன. அப்படியிருந்தும் அந்த இடைவெளிக் காலங்களில் சுமார் 10 நூறுநாள் படங்களில் நடித்துவிட்டார். எத்தனையோ விதமான எதிர்ப்புகளைச் சமாளித்துக்கொண்டு 'தெய்வமகன்' உலகபடவிழாவிற்குச் சென்றது. 'தில்லானு மோகனும்பாள்' ஜனுதிபதியின் சிறப்புப் பரிசு பெற்றது. 'தில்லானு மோகனும்பாள்' தங்கப்பதக்கத்திற்கு தகுதிவாய்ந்தது என்று கூறிய மு. க. வின் தமிழக அரசுப் பரிசுத்திட்டத்தில் இரண்டாவது பரிசையேபெற்றது.

ஆகவே தமிழக அரசின் உதவி இதுவரை சிவாஜிக்கோ அவர் படத்திற்கோ கிடைத்ததுமில்லை இனி மேல் அது அவருக்கு தேவையுமில்லை. அதிக தயாரிப்பில் உள்ள படங்கள் சிவாஜியின் படங்களே. சுமார் 30 படங்களில் நடிக்கிறார் இவற்றில் ஒரு படத்தைத்தானும் தி. மு. க. வினரோ அல்லது அவர்கள் ஆதரவாளர்களோ தயாரிக்கவில்லை. ஆகவே அதையிட்டு கவலை கொள்ளத்தேவையில்லை. 150-வதுபடத்தை ஆவணிக்குள் எட்டிப்பிடிக்கப் போகிறார் 5-ந் திகதி திரையிட்ட அருணேதயம் 145-வது படம். இம்மாதம் இன்னும் இரண்டு படங்கள்வெளிவருகின்றன. பிறதயாரிப்பாளர்கள் படம் தயாரிக்காதுவிட்டாலும் அவரது சொந்த நிறுவனத்தின் கீழ்படம் தயாரித்து தனது சாந்தி தியேட்டரில் திரையிடுவார். இன்னும் [illegible] 50 லட்சம் மக்கள் சிண்டிகேட்டுக்கு வாக்களித்தார்கள் என்று உங்கள் பத்திரிகை வாயிலாகவே அறிந்தேன். ஆகவே அந்த 50 லட்சம் பேரும் படம்பார்த்தாலே போதும் அதுவைர விழாவும் கொண்டாடி அதற்கு மேலும்ஓடும். சிவாஜிபேசிய கூட்டங்களுக்கு பல லட்சம் மக்கள் வந்திருந்ததாகவும் எழுதியிருந்தீர்கள். (சென்னை நிருபர் மூலமாக) ஆகவே அவர்கள் சிவாஜி சிண்டிகேட் கூட்டங்களில் பேசுகிறுர் என்று தெரிந்தும் திரண்டு வந்தார்கள் என்றுல் அவர்கள் சிவாஜியின் அழகையும் பேச்சுத்திறமையையும் பார்க்க வந்திருக்கிறுர்கள். எனவே அவர்களாவது சிவாஜியின் படங்களைப் பார்ப்பார்கள்.

சிவாஜி கூட்டங்களில் என்ன கூறிஞர்? காமராஜர் என் தலைவர் ஆகவே அவர் கட்சிக்கு வாக்களியுங்கள் என்றுர். மக்கள் சிவாஜி கூறியதை ஒப்புக்கொண்டார்கள். காமராஜர் நல்ல தலைவர் என்பதையும் அரசியலுக்காக மக்களுக்காக தன் சுகபோகங்களைத் துறந்தவர் என்பதையும் ஒப்புக்கொண்டார்கள். அதனுல் தான் அவர் ஒருலட்சத்திற்கும் அதிகப்படியான பெரும்பான்மை வாக்குகளால் வெற்றிபெற்றுர். ஒன்றுமட்டும் உண்மை அவர்கள் அவரின் கட்சியை ஒப்புக்கொள்ளவில்லை. அதற்கும் காலம் வரும் ஏனெனில் இது ஒரு புதிய கட்சிதானே எப்படி எமது நாட்டில் த. காங்கிரஸிலிருந்து பிரிந்து தமிழரசு உருவாகி முதல் தேர்தலில் இரண்டு ஸ்தானங்களைப் பெற்றதோ அதைப்போல்தான் இதுவும் இப்போது. சிண்டிகேட் புதுக்கட்சிதானே!

—நல்லை ஆனந்தன்.

## பாதுகாப்புடன் கி. ச. கூட்டம்

தாவடி, திங்கள்

உடுவில் கிராமசபையின் கூட்டம் பொலிஸ்பாதுகாப்புடன் நடைபெற்றது. ஒத்திவைக்கப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது கூட்டமும் இதுவே.

மேற்படி கிராமசபையின் வைத்திய நிலைய ஊழியரின் தற்காலிகவேலை நீக்கம் சம்பந்தமா[illegible] வொன்று இக்கூட்டத்தில் [illegible] தெரியவந்தது.

கோட்டை, திங்கள்

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரித் தமிழ்மன்றத்தின் விவாதக் குழுத்தலைவராக யாழ்ப்பாணம் கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்வன் க. இந்திரநாதன் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

## 'அரசியல் அமைப்பைத் திருத்த தி. மு. க. ஆதரவளிக்கும்'

சென்னை, மார்ச் 15

அடிப்படை உரிமைகளைப் பாதிக்காத வகையில் மக்கள் நலன்களை முன்னேற்றுவதற்காக அரசியல் சாஸனத்தில் திருத்தங்கள் கொண்டுவருவதற்கு மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு திராவிட முன்னேற்றக்கழக அரசும் கட்சியும் ஆதரவளிக்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணநிதி கூறினர்.

திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலில் பெரும் வெற்றியீட்டியதை கொண்டாடவும் தமிழக மக்களுக்கு நன்றிதெரிவிக்கவும் மெரினு கடற்கரையில் நடைபெற்ற கூட்டமொன்றில் திரு. கருணநிதி இக்கருத்தை வெளியிட்டார்.

சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கவும் ஏழை எளிய மக்களின் நிலையை உயர்த்தவும் மத்திய அரசு எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஆதரவு அளிப்போம் என்றும் திரு. கருணநிதி கூறினர்

மக்களின் பொருளாதாரப் பிரச்னைகள் தீர்க்கப்படாவிட்டால் மேற்கு வங்காளத்தில் ஏற்பட்டுள்ள நிலைமை ஏனைய பகுதிகளுக்கும் பரவும் அபாயம் ஏற்படுமென்று அவர் எச்சரிக்கை விடுத்தார்.

## கிழக்கு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கிழக்குப்பாகிஸ்தானிலுள்ள முழு அரசியல் நிர்வாகப் பொறுப்புக்களையும் தாம் எடுத்துக் கொண்டிருப்பதாக அவாமி லீக்கின் தலைவர் சேக் முஜிபுர் ரஹ்மான் அறிவித்துள்ளார்.

டாக்கா கேந்திரவானெலி திரு. ரஹ்மானின் அறிவிப்பை ஒலிபரப்பியது. அச்செய்தியில் மேலும் தெரிக்கப்பட்டுள்ளதாவது: பாகிஸ்தானில் வலுவான ஆட்சி என்பதாலும் மாகாணசட்டசபையில் பெரும்பான்மை என்பதாலும் இந்நடவடிக்கையை எடுப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

ஏழரைக்கோடி மக்களின் நலத்தையும் வாழ்வையும் கருத்தில் கொண்டே இவ்வதிகாரத்தைத் தான் எடுத்துக் கொள்வதாகவும் தெரிவித்தார்.

அஹிம்சைப் போராட்டத்தின் இரண்டாவது வாரத்தின் இறுதிப்பகுதியில் இவ்வறிவிப்பு வெளியிடப்பட்டிருக்கிறது

இப்பகுதியில் மத்திய மாகாண அரசு நிர்வாகச் செயலகங்கள் மூடப்பட்டிருக்கும் ஆனல் தனியார் கடைகளும் நிலையங்களும் வழமைபோல் இயங்கும் ஒழுங்கையும் கட்டுப்பாட்டையும் நிலைநாட்ட பொலிசார் சடுபடுவர் தேவை ஏற்படின் அவர்களுக்கு உதவிபுரிய அவாமிலீக்கின் தொண்டர்படை முன்வரும் என்று ஷேக் அறிக்கையொன்றில் தெரிவித்திருக்கிறுர்.

மக்களின் இயக்கத்தைப் பற்றிய முழுச் செய்திகளையும் வானெலிகள் தொலைக்காட்சி பத்திரிகைகள் செய்திகளை வெளியிடுமாறு ரஹ்மான் கேட்டுக்கொண்டுள்ளார்.

எல்லா இடங்களிலும் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருக்கும் எங்கள் மீது இராணுவம் எவ்வித நிர்ப்பந்தங்களைப் பிரயோகித்தாலும் அதைத்தாங்குவதற்கு நாம் தயாராயுள்ளோம் மக்கள் புதிய உற்சாகத்தோடு தங்கள் போராட்டத்தை நடத்தவேண்டும் என்றுர்

## காரியாலயங்களும் நிர்வாகச்செயலாளரும்

### ஒவ்வொரு ப.செ. குழுவுக்கும் அரசு நியமிக்கும்

பருத்தித்துறை, திங்கள்

விவசாயிகளுக்குக் கொடுக்கப்படவிருக்கும் அடையாள அட்டைகள் அடிமைத்தனத்தின் சின்னமல்ல. உண்மையில் அவை விவசாயிக்கு வேண்டியதும் உதவக்கூடியதுமான விபரங்கள் அடங்கிய சிறு கைநூல்களாகும். அக்கைநூல்களைக் கொண்டு விவசாயிகள் கடனுதவி பெறவும் பல்வேறு விவசாய ஸ்தாபனங்களுடனும் பிறருதவியின்றித் தொடர்பு கொள்ளமுடியும்.

இவ்வாறு விவசாய உதவிக் கமிஷனர் திரு ஐ. கே. வீரவர்த்தனு, நேற்றுமாலை வதிரி கன்னியர்மட மண்டபத்தில் நடந்த பயிர்ச் செய்கைக் குழு சமாஜப் பிரதிநிதிகள் மாநாட்டில் உரையாற்றிய போது குறிப்பிட்டார். திரு எஸ் அந்தோனிமுத்து தலைமையில் இம்மாநாடு நடந்தது.

இன்று அரசாங்கம் நிதிப்பிரச்னையை எதிர்நோக்கியிருந்த போதிலும் விவசாயிகளைப் பொறுத்தவரை அவர்களுக்கான கடன்வசதிகள் போன்ற உதவிகளைச் செய்ய ஆயத்தமாயுள்ளது. ஒவ்வொரு காரியாலயமும், ஒவ்வொரு பயிர்ச்செய்கைக் குழுவிற்கும் ஒவ்வொரு நிர்வாகச் செயலாளரும் நியமிக்கவிருக்கிறது என திரு வீரவர்த்தனு சொன்னர்.

திரு வீரவர்த்தனு யாழ்ப்பாணக் கமக்காரரின் விடாமுயற்சி' தீவிர உழைப்பு சிக்கன வாழ்வு ஆகியவற்றைப் பாராட்டியதோடு அவர்களின் செழிப்புறத் தம்மலான உதவிகளை செய்யவிருப்பதாகவும் கூறினர்.

மாவட்ட விவசாய உத்தியோகத்தர் திரு வி. ரி. சம்பந்தமூர்த்தி வடமராட்சி மேற்குக் காரியாதிகாரி திரு எஸ் தம்பிமுத்து, திரு கே தங்கத்துரை, வடபகுதி உதவி விவசாய ஆணையாளர் ஆகியோரும் பேசினர். திரு வி மகாலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினர்.

## மரணம்

மாவிட்டபுரம், திங்கள்

தவறுதலாக கிணற்றுள் விழுந்து நீரில் மூழ்கி 62 வயதுப் பெண் மரணமானர். உரும்பராய் வடக்கைச் சேர்ந்த இராசையா பூரணம் என்ற இவ்வயோதிப மாதின் மரணம் சம்பந்தமாக விசாரணை நடத்திய மரணவிசாரணை அதிகாரி திரு. ஆர். பாலசுப்பிரமணியம் தவறுதலாக சம்பவித்த மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

## எசலமுல்லக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

போன்ற இடங்களில் இச்சக்திகள் செயற்பட்டுவருவதாகவும், பொலிசார் இவ்வித சக்திகள் மீது கடும் நடவடிக்கை எடுத்துவருவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார்'

அசல முல்ல கிராமத்திற்கு அருகில் எறிகுண்டுக் குதமொன்றை பொலிசார் கண்டுபிடித்துள்ளனர். இந்த இடம் சமீபத்தில் கைக்குண்டு வெடித்ததினுல் இளைஞர்கள் மரணமான இடத்திற்கு அருகாமையிலுள்ளது இந்தக் குண்டுகள் பூமிக்கடியில் சுரங்க அறையில் ஒழித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் அவைகளை வெளியில் எடுப்பதற்குமுன் விமானப்படையில் தீயணைப்புக் குழுவினர் அந்த அறைக்குள் தண்ணீரை ஊற்றி நிரப்பினுர்கள் என்றும் பின்னர் ஒவ்வொன்றாகக் குண்டுகள் வெளிக்கொண்டுவரப் பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. பின்னர் பயன்படுத்துவதற்காக இவை ஒழித்து வைக்கிருக்கப் படலாமென பொலிசார் நம்புகின்றனர்

(ஸி. பி. ஏ)

சோமு - ஆனந்தன்
அண்ணனும் தம்பியும் தான்
அவர்களின் தாயின் இறுதியாத்திரையுடன்
இவர்களின் பிரயாணமும் தொடங்குகிறது.
எத்தனை பாதைகள் அப்பப்பா......!
'ஈழநாடு' பரிசுபெற்ற நாவல்
"பிரயாணி"
இராஜநாயகன்
எழுதியது
18-3-7.ல்
'ஈழநாடு'
[illegible]மலரில் ஆரம்பமாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பயிற்சி கலாசாலை

# புகுமுகப் பரீட்சை இனி இல்லை?

கோட்டை, திங்கள்

ஆசிரியர் பயிற்சிக்கல்லூரிகளுக்கு வருடம் தோறும் நடத்தப்பட்டுவரும் ஆசிரியர் பயிற்சி கல்லூரி புகுமுகப்பரீட்சையை ரத்துசெய்ய கல்வி அமைச்சு முடிவுசெய்திருக்கிறதாம்.

இதன்காரணமாக இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருந்த ஆசிரியர் கல்லூரி பிரவேசப் பரீட்சை ரத்து செய்யப்பட்டுள்ளதாம்.

இம்மாதம் 24-ம் திகதி நடைபெறவிருந்த சோதனையில் தோற்றுவதற்கு சுமார் 15,000 ஆசிரியர்கள் விண்ணப்பங்கள் தாக்கல் செய்திருந்தார்கள்.

1970-ம் ஆண்டு 12-ம் மாதம் 18-ம்திகதிய கஸட் அறிவித்தல் ஒன்றின் பிரகாரம் இந்தவிண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்தன.

இந்த விண்ணப்பங்களுக்காக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் காலப்போக்கில் பரீட்சார்த்திகளுக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும் என்றும் பரீட்சைப் பகுதி ஆணையாளர் அறிவித்திருக்கிறாராம். இனிமேல் பயிற்சிக்கான ஆசிரியர்கள் கல்வி அமைச்சு நடத்தும் தெரிவு ஒன்றின் மூலமே தேர்ந்தெடுக்கப்படுவார்களாம்:

இச்செய்தி 'தவஸ' பத்திரிகையில் வெளியாகியுள்ளது.

## வானொலிப் போட்டியில் வெற்றி

ஒட்டுசுட்டான், திங்கள்

விவசாய இலாகாவினால் நடாத்தப்படும் இளைஞர் விவசாயக் கழகங்களின் வானொலி விவசாயப் போட்டிக்கென மாங்குளம் விவசாய விரிவாக்க நிலையத்தில் நடைபெற்ற தேர்வுப்போட்டியில் ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசுபரன் இ. வி. கழகமும் தேர்வுபெற்றது. செல்விகள் சி. தவமணிதேவி, சி. ஆயிலியம், செல்வன்கள் இ. பத்மநாதன், பொ. தேவராஜசேகரம் ஆகியோர் தேர்வுபெற்றனர்.

## பசு நிகழ்த்திய அதிசயம்

அம்பன், திங்கள்


குடத்தனையைச் சேர்ந்த ஒருவரது வீட்டிலுள்ள பசு ஒன்று 9வது மாதத்தில் கன்று ஒன்றை ஈன்றதாகவும், அது ஒரு கிழமைக்குள் இறந்துவிட்டதாகவும், ஆனால் அதே பசு அடுத்த மாதம் திரும்பவும் ஒரு பசுக்கன்றை ஈன்றுள்ளதாகவும் சொல்லப்படுகிறது. கன்று தற்பொழுது நல்ல நிலைமையில் இருக்கிறதாம்.


கையிருப்பில் கிடைக்கும்

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

WALKER-WOLSELEY நீர்ப்பாசன பம்புகள்

★ மணிக்கு 10,000 கலன்
★ குறைந்த இயக்கச் செலவு
★ பராமரிப்புச் சுலபம்



2" பெற்றோல் / மண்ணெண்ணெய் பம்ப்

நீர்ப்பாசன மற்றும் பொதுவான இறைப்பு வேலைகளுக்கான பிரசித்திபெற்ற நம்பகமான வாக்கர் வூல்ஸ்லி பெற்றோல் / மண்ணெண்ணெய் யந்திரங்கள் இப்பொழுது வாக்கர் இண்டஸ்ரீஸ் (சிலோன்) லிமிட்டெட்டால் இலங்கையில் தயாரிக்கப்படுகின்றன.

WI வாக்கர் இண்டஸ்ரீஸ் தயாரிப்பு

பக்கபலமான பராமரிப்பு ஊழியர்களுடன் சகலவித உதிரிப்பாகங்களும்.

வாக்கர்ஸ் யாழ்ப்பாணம்

இல: 37/39, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்

தொடர்பு கொள்க:

திரு: ஏ. வி. ஜோசெப் (மனேஜர்)

தொலைபேசி: 7031


## இன்றைய பலன்

பங்குனி மாதம் 2-ம் திகதி (16-3-71)

மேஷம்- கஸ்திர வழியால் கனிவான சம்பவங்களுக்கு இடமுண்டு. வாழ்வுப் பயணத்தில் வளமான திருப்பம் உருவாகும்.

ரிஷபம்- கொடுக்கல் வாங்கல் மூலம் அபிப்பிராய மோதல்கள் ஏற்படும். கடன் தொல்லைகள் அதிகரிக்கும்.

மிதுனம்- பிதாவழியில் இருந்து மகிழ்ச்சிகரமான செய்திக்கு இடமுண்டு. தெய்வநம்பிக்கையில் அதிக ஆர்வம் பிறக்கும்.

கடகம்- இதயத்தின் ஏக்கம் இன்று கனியும். தேடிய பொருள் காலடியில் சரண் அடையும்.

சிம்மம்- வசதிகள் பெருகும் வரவிலும் திருப்தி ஏற்படும். செல்வாக்குப் படைத்தவர்களின் ஆதரவு பெருகும்.

கன்னி- எதிர்பாராத வகையில் பொருள் விரயமாகும். வியாபாரத்துறையில் பிணக்குகள் தோன்றி மறையும்.

துலாம்- தொழில்துறையில் மோதல்கள் தோன்றக்கூடும். மேலதிகாரிகளின் கண்டிப்புக்கு இலக்காக நேரிடும்.

விருட்சிகம்- நீண்டநாள் எதிர்பார்த்த நல்ல செய்தி இன்று கிடைக்கலாம். வணிகர்களுக்கு வியாபார விருத்தியுண்டு.

தனுசு- தூக்கம் விழிகளைத் தழுவ மறுக்கும். கடந்தகால எண்ணங்கள் அலைமோதும். அடுத்துக் கெடுப்பதற்கு சிலர் முனைவர்.

மகரம்- மதிநுட்பத்தின் மூலம் மற்றவர்களைக் கவருவீர்கள். பயன்தரும் பிரயாணமொன்று மேற்கொள்ளப்படலாம்.

கும்பம்- செய்தொழிலால் சிறப்புக் கிடைக்கும். வழக்கு விவகாரங்களில் வெற்றியுண்டு. இன்று பொன்னாள்.

மீனம்- கௌரவத்தைப் பாதிக்கக்கூடிய சம்பவம் இடம்பெறலாம். ஆற்றலை தொடுப்பதற்கு எதிரிகள் காத்திருப்பர்.

சோதிடக் கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 16-3-71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

344 மீ அன் 61 மீ

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 7-45 திரைகானம், 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதம்.

344 மீ அன் 49 மீ

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ அன்ட் 61 மீ

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 நாளையசந்ததி.

இரவு 6-15 வாத்தியஇசை, 6-30 பிறநாட்டு பாடல்கள், 7-00 உரையாடல், 7-15 நாளவாத்தியக்கச்சேரி, 7-45 ஐ. நா. சித்திரம், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 வானொலி டாக்டர், 9-40 கதாப்பிரசங்கம், 10-30 செய்தித் தொகுப்பு.

அமைச்சரைக் கொன்ற

## பள்ளி ஆசிரியருக்கு ஆயுள் தண்டனை

மாண்ட்றியல், மார்ச் 15

குயூபெக் தொழில் அமைச்சர் பீர்ரி லாபோர்ட்டேயைக் கொலைசெய்ததான வழக்கில் 27-வயது பாடசாலை ஆசிரியர் குற்றவாளியாகக் காணப்பட்டு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டார்.

அமைச்சர் லாபோர்ட்டே கடந்த அக்டோபர் மாதம் கடத்திச்செல்லப்பட்டு கொலை செய்யப்பட்டது தெரிந்ததே.

குயூபெக் விடுதலை முன்னணி என்ற இயக்கத்தினரால் இவர் கடத்திச் செல்லப்பட்டிருந்தார்.

போல்றோஸ் என்ற மேற்படி ஆசிரியர் தமக்கு எதிரான வழக்கில் தாமேவாதாடினார் கடத்தல் சம்பவத்தில் தாமும் பங்குகொண்டதாக அவர் ஒப்புக்கொண்டார்.

## படுப்பது எப்படி?

மாஸ்கோ, மார்ச் 15

சிறிது உயரம் குறைந்த தலையணையில் மல்லாந்து படுத்துத் தூங்குவதே மிகச் சிறந்தது என்று டாக்டர்கள் கூறுகின்றனர். இவ்வாறு படுத்தால் இரத்த ஓட்டம் தங்கு தடையின்றி நடைபெறுகிறது. 'மைக்ரின்' தலைவலியால் அவதிப்படுவோர் மல்லாந்து தூங்குவது நல்லது. காலையில் அவர்கள் தலைவலி நீங்கி புத்துணர்ச்சியுடன் எழுந்திருப்பர். ஆனால் உடல் உழைப்பால் களைத்துப் போனவர்கள் இடது பக்கம் சாய்ந்து படுப்பது நல்லது வழக்கமாக உடலின் வலதுபுறம் அதிகக் களைப்படைகிறது என்றும், இடதுபுறமாகப் படுத்தால் மிகவும் பாதிக்கப்பட்ட தசைகள் நிரம்பவும் ஓய்வு பெறுகின்றன என்றும், ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

அஜீரணத்தால் அவதிப்படுவோர் குப்புறப் படுக்கவேண்டும். தொந்தி விழுந்தவர்களும் இவ்வாறு படுக்கவேண்டும். உடல் எடையின் அழுத்தத்தால் குடல்களுக்கு நன்மை உண்டாகிறது.

உங்களுக்குக் கல்லீரல் தொந்தரவு இருந்தால் வலதுபுறமாகப் படுக்க வேண்டும்.

சோவியத்

## சந்திரவாகனத்தின் 5-வது சந்திரப் பகல்

மாஸ்கோ, மார்ச் 15

நீண்ட தூர விண்வெளித் தொடர்பு நிலையத்திலிருந்து தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மழைக்கடலின் மேலாக ஆதவன் மீண்டும் உதித்தான். சோவியத் சந்திர வாகனமான, லூனகொட் 1' விஞ்ஞான ஆய்வுகளையும் பரீட்சார்த்தங்களையும் மீண்டும் ஆரம்பித்தது. இந்த வாகனம் நவம்பர் 17-ந் திகதியிலிருந்து சந்திரனில் இயங்குகிறது.

சந்திரவாகனம் மீண்டும் இயங்க ஆரம்பிப்பதற்கு முன்பு அதன் அமைப்புகளின் நிலையைப் பரிசோதிப்பதற்காக அதனுடன் வானொலித் தொடர்பு கொள்ளப்பட்டது: அத்துடன் மார்ச் 7-ந் திகதி தொலைக்காட்சிகமராக்கள் இயக்கப்பட்டன. இந்தப் படப்பிடிப்புக் கருவிகளின் மூலம் சந்திர அடிவானத்திலிருந்து சூரியன் எழுவது படம் பிடிக்கப்பட்டது.

மார்ச் 8-ந் திகதி சந்திர வாகனத்துடன் தொடர்பு கொள்ளப்பட்ட முதல் தடவை ஐந்தாவது சந்திரப் பகலுக்கான திட்டத்தை நிறைவேற்ற சந்திர வாகனத்தின் தானியங்கி நகர்வுச் சாதனங்கள் தயார்படுத்தப்பட்டன.

மாஸ்கோ நேரம் 23மணி 30 நிமிடங்களுக்கு ஆரம்பமான இரண்டாவது வானொலித் தொடர்பின் போது சந்திரத்தரையை ஆராயும் பணியை 'லூனகொட்-1' ஆரம்பித்தது. சந்திர வாகனம் வடமேற்கு நோக்கி நகர்ந்தது. இது பல சிறிய சந்திரக் குழிகளையும், எண்ணிறந்த கற்பாளங்களையும் தாண்டிச்சென்றது. அப்போது சந்திரக் கற்பாறையின் தொழில்நுட்ப மூலகங்கள் பல கடவைகள் அளக்கப்பட்டன ரேடியோ மானி மூலமும். எக்ஸ்றே தொலைக்காட்சி மூலமும் புதிய தகவல்கள் பெறப்பட்டன.

## சக்கரத்தை கண்டுபிடித்தவர் யார்...?

மாஸ்கோ, மார்ச் 15

சக்கரத்திற்கும், பழங்கால நாகரிகங்களுக்கும் தொடர்பு இருக்கிறது என்றும், கிழக்கு நாடுகளிலிருந்து சக்கரம் வந்தது என்றும், புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். சுமேரியன் சாம்ராஜ்யத்திற்கு முன்பு, மெசபடோமியாவில் சக்கரம் உருவாக்கப்பட்டது என்று பிரிட்டிஷ் அறிஞர் வி. கார்டன் 1951ல் கூறினார்.

ஆனால், பிரிட்டிஷ் புதைபொருள் ஆராய்ச்சியாளரும், எடின்பரோ பல்கலைக்கழகப் பேராசிரியருமான ஸ்டீவர்ட் பெகாட் என்பவர் இதை மறுத்துள்ளார். கருங்கடலுக்கு அருகில் நாகரிகம் தழைத்த போது சக்கரம் முதன் முதலில் தோன்றியதென்றும், அது அங்கு பயன்படுத்தப்பட்டதென்றும் அவர் கூறுகிறார் பல்கேரியாவிலுள்ள பெகோவா என்ற கிராமத்திற்கு வெளியே ஒரு சக்கரம் கிடைத்துள்ளது இது 5,850 ஆண்டுகளுக்கு முந்தியதென்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

## இளந் தாய் தற்கொலை

மாங்குளம், திங்கள்

ஐந்து குழந்தைகளின் தாயொருவர் தனது வீட்டு வளையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்து கொண்டார். மாங்குளம் - முல்லைத்தீவு றோட்டில் வசித்துவந்த அசோகவதி என்ற பிரஸ்தாப பெண்ணின் வயது 28.

தமது பிள்ளைகளுக்குக் காலைச்சாப்பாடு தயாரித்துக் கொடுத்து அயல்வீடுகளுக்கு அனுப்பிவிட்டுக் கணவனுக்குமதே நீர்கொடுத்து சாமான்கள் வாங்கி வர வெளியே அனுப்பிவிட்டு வீட்டில் வேறு யாருமில்லாத சமயம் தூக்கிட்டுக் கொண்டதாகத் தெரிய வந்தது. சப்தம் கேட்டு உடன் அயலவர்கள் ஓடிவந்தபோதிலும் அசோகவதியின் உயிரைக்காப்பாற்ற முடியாது போய்விட்டதாம் மல்லாவிவைத்திய அதிகாரி பிரேதபரிசோதனை நடத்தினார். திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. சிவகுரு தற்கொலையெனத் தீர்ப்பளித்தார். குடும்பக் கஷ்டமே இந்தத்தற்கொலைக்குக் காரணமெனத் தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வியாங்கொடையில்

## மக்கள் பிடித் தொழிற்சாலே

### பிரதமர் திறந்துவைத்தார்

வியாங்கொடை, திங் 'உலகின் பலநாடுகள் அபரிமிதமான முன்னேற்றத்தை அடைந்திருக்கக் காரணம் அந்நாட்டுமக்கள் நாட்டுப்பற்றுடனும் தியாக மனப்பான்மையுடனும் செயல்படுவதேயாகும்' என வியாங்கொடை தண்டகமுவையில் முதலாவது மக்கள் பிடித்தொழிற்சாலையை ஆரம்பித்துவைத்துப் பேசியபோது பிரதமர் திருமதி பண்டாரநாயகா குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

"பிடித் தொழிலாளர்களின் நலன் கருதியே அரசாங்கம் மக்கள் பிடி உற்பத்தி முயற்சியை மேற்கொள்ளத் தீர்மானித்தது. இந்நாட்டில் ஒரு சிலரின் ஏகபோக சொத்தாக இருந்த பிடித்தொழிலை இன்று அனைவருக்கும் நலன்பயக்கும் கைத்தொழிலாக மாற்றியமைக்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## 45000 பனை மரங்கள் நாசம்

கோட்டை, திங்கள் அம்பாந்தோட்டை மாவட்டத்தில் 1969 ஆண்டு நாட்டப்பட்ட 60,000 பனைமரங்களில் 45000 கன்றுகளை கால்நடைகள் அழித்துவிட்டன.

பனம் பொருள் உற்பத்தி விசாரணைக்குழு கடந்த மாதம் அம்பாந்தோட்டை பகுதிக்குச் சென்று ஆய்வு நடத்தியபோது மேற்படி அழிவைக் கண்டுபிடித்துள்ளது.

மேற்படி குழு இம்மாதம் 28, 29, 30ம் திகதிகளில் திருக்கோணமலை மாவட்டத்துக்கும் ஏப்பிரல் முதல் வாரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்துக்கும் விஜயம் செய்துள்ளது.

## அமைச்சர்களை சந்திக்க தீர்மானம்

யாழ்ப்பாணம், செவ் அச்சுவேலி 4ம் வட்டாரம் தம்பாலை வடக்கிலுள்ள பெருங்காடு என்ற இடத்தில் தம்சாகக் கிடந்த முடிக்குரிய காணிகளில் குடியேறியுள்ள ஏழைமக்களுக்கு வீடுகள் அமைத்துக்கொடுத்து உதவுமாறு வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமனையும் நிதியமைச்சர் டாக்டர் என். எம். பெரேராவையும் நேரில் சென்றுகேட்பதென பெருங்காடு வாலிபமுன்னணிக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. திரு. சி. விஜயரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வட்டார உறுப்பினரான திரு மு. செல்லத்துரை தலைமையில் சங்கத்தலைவர் திரு. சி. விஜயரத்தினம், செயலாளர் திரு. ஞா. மாணிக்கம், அறநிகாரி திரு. செ கதிரன், உபதலைவர் திரு. ஞ' ஆதிபரன், திரு கா சிவலிங்கம் ஆகியோர் அமைச்சர்களைச் சந்திப்பதென முடிவுசெய்யப்பட்டது.

பெருங்காடு முடிக்குரிய காணிகளில் அச்சுவேலி கிராமசபை 4-ம் வட்டார உறுப்பினர் திரு மு செல்லத்துரை தலைமையில் கடந்த மாதம் 40 குடும்பங்கள் குடியேறினர்.

ச ச நிலைய

## நன்றித்தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் "இன்றைய அரசாங்கம் ஒரு முற்போக்கான அரசாங்கம் என்றபடியாகிதான் சிறுபான்மைத்தமிழர் மகாசபைத் தலைவர் திரு எம். சி சுப்பிரமணியத்தை ஆட்சிமன்ற உறுப்பினராக நியமனம்செய்தது அவர் அரசாங்கத்தில் இருந்தமையால் தான் தீண்டாமை ஒழிப்புச்சட்டம் நிறைவேற்ற முடிந்தது" என தன்னாலை தெற்கு தயாநிதி சனசமூகநிலையக் கட்டடத்தில் பேசுகையில் மகாசபை நிர்வாகக் காரியதரிசி திரு. எஸ். செல்லையா கூறினார்.

சமாதான நீதவான் திரு. ஆ. குலேந்திரம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தீண்டாமைஒழிப்பு சட்டம் நிறைவேற உதவியாக இருந்தநியமன எம் பி திரு. எம் சி: சுப்பிரமணியத்திற்கும் பிரதமமந்திரி திருமதி சிறிமா பண்டாரநாயக்காவுக்கும் நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

தென்னிந்தியாவில் திராவிட முன்னேற்றக்கழகம் வெற்றியைப் பாராட்டி திரு எஸ். தங்கராசா தலைமையில் தேநீர் விருந்துபசாரமும் நடாத்தப்பட்டது.

## ஸ்டாலின் ...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

காவலில் இருந்தபோது இந்தத் தகவலை யூகோஸ்லாவிய கம்யூனிஸ்ட்கட்சியினரிடம் வெளியிட்டாராம் யூகோஸ்லாவிய வாரப் பத்திரிகை யொன்றில் இந்தப்பழைய குறிப்புகள் வெளிவந்துள்ளன

அதிகார பூர்வமான தகவல்களின்படி ஸ்டாலின் மனைவி அலலுயேவா 1932-ல் தற்கொலை செய்து கொண்டார். மாக்ஸிம் கோர்க்கி 1936-ல் மரணமானார்.

தனது மனைவியைக் கொன்றபொழுது அவர் தற்கொலை செய்து கொண்டார் என்று வர்ஜிதப் படுத்துவதற்காக தமது சகோதரர் ஐகோடாவிடம் ஒரு பிரசித்தி பெற்ற டாக்டரை அழைத்து வரும்படி ஸ்டாலின் கூறியதாக ஒறிகோறெவ்ஞ தெரிவித்துள்ளார்.

இருதய நோய் நிபுணர் ஒருவரை ஐகோடா அழைத்து வந்தாராம். ஆனால் அவர்மரணப்பிரகடனத்தில் கையெழுத்திட மறுத்துவிட்டாராம். பின்னர் அவர் ஆட்சி பீடத்தைச் சேர்ந்தவர்களுக்குவேண்டுமென்றே பிழையான வைத்தியம் செய்து மரணம் ஏற்படுத்தினார் என்று சிறையில் வைக்கப்பட்டாராம், ஐகோடாவும் ஏகாதிபத்திய 'ஏஜன்ட்' எனக்கூறி1937-ல் மரணதண்டனை விதிக்கப்பட்டார்.

ஐகோடாவின் நெருங்கிய நண்பராக விருந்த கோர்க்கியைக்கொலை செய்யஏற்பாடு செய்யும்படி அவருக்கு ஸ்டாலின் பின்னொரு தடவை உத்தரவிட்டாராம். ஸ்டாலினின் சிலநடவடிக்கைகளை முதலில் ஆதரித்த கோர்க்கி இதன் மூலம் ஸ்டாலினுக்கு உபதேசம் செய்ய உரிமை இருப்பதாக கருதினாராம்.

எழுத்தாளர் கோர்க்கியைக் கொலை செய்யஉத்தரவிடப்பட்டதை தொடர்ந்து ஐகோடாவுக்கு சொந்த நெருக்கடிகள் ஏற்பட்டதாகவும் இதனால் அவர் தமது உறவினர்களை வெளிநாடுகளுக்கு அனுப்பமுயற்சி செய்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது ... இறுதியில் கைது செய்யப்பட்டு ... யப்பட்டாராம்.

## மகா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய் இம்மாதம் 29-ம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 3 நாட்களுக்கு புங்குடுதீவு வல்லன் திருப்பெருந்துறை ஸ்ரீநாகதம்பிரான் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடைபெறவிருக்கிறது.

பின்னர் 1-4-71 வியாழக்கிழமை தொடக்கம் 10 நாட்களுக்குத் தொடர்ந்து உற்சவம் நடைபெறும் கடைசி நாளாகிய 11-4-71 ஞாயிற்றுக்கிழமை பகல் சங்காபிஷேகமும், அன்னதானமும் இரவு திருக்கல்யாணமும் சுவாமிவீதிவலம் காட்சியும் இடம்பெறும்.

## வள்ளுவர் வழி நடக்கவேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள் வாழ்க்கையில் நல்வாழ்வு பெற திருக்குறளைச் சிறுவயதிலிருந்தே படிக்கவேண்டும். படித்தபடி நடக்க வேண்டும். சமயஸ்தாபனங்கள் திருக்குறள் வகுப்பை நடத்த முன்வரவேண்டும்.

இவ்வாறு சாந்தையர் மடம் சைவசமய அபிவிருத்திக்கழகத்தினரால் நடாத்தப்பட்ட திருவள்ளுவர் குருபூசையின்போது பேசிய திரு. வ. கந்தசாமி தெரிவித்தார்.

செல்வன் சு. ரவீந்திரன் திருவள்ளுவர்பற்றி உபந்நியாசம் நிகழ்த்தினார்.

## அல்லாரை அம்மன் ஆலயம்

சாவகச்சேரி, திங்கள் ஆசார சீலராக வரும் எவரும் அல்லாரை அம்மன் கோவிலுக்குள் சென்று வழிபடலாம் என்று இக்கோவில் நிர்வாகியான திரு. பி. வெற்றிவேலு வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார். இக்கோவில் உரிமைக்காரரான மீசாலை வடக்கைச் சேர்ந்த திரு. வி. சோமசுந்தரமும் இதற்கு சம்மதம் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சர் பார்வையிட்டார்

கண்டி, திங்கள் 40 கோடி ரூபா செலவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள மகாவலிகங்கையை வடக்கே திசை திருப்பும்வேலையை நேற்று நீர்ப்பாசன, மின்சார நெடுஞ்சாலை அமைச்சர் திரு மைத்திரிபால சேனநாயக்கா சென்று பார்வையிட்டார்.

பொல்கொல்லையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்காகத் தோண்டப்பட்டுவரும் சுரங்கத்தின் உள்ளே அமைச்சரும் மற்றும் பிரமுகர்களும் நெடுந்தூரம் சென்று பார்வையிட்டனர். இச்சுரங்கம் சுமார் 26,000 அடி வரை தோண்டப்பட்டுள்ளது. உக்குவலையில் 11,000 அடி வரை தோண்டப்பட்டுள்ளது. இங்கு நாளொன்றுக்கு 20 அடி வீதமும் பொல்கொல்லையில் நாளொன்றுக்கு 14 அடி வீதமும் தோண்டப்பட்டுவருகின்றன.

## வரவேற்கத் தீர்மானம்

ஊர்காவற்றுறை, திங்கள் ஊர்காவற்றுறையில் இலங்கை வங்கிக் கிளையைத் திறந்துவைப்பதற்காக விஜயம்செய்யும் நிதி அமைச்சர் திரு. என். எம். பெரேராவுக்கு வரவேற்பளிக்க சரவணை பாரதி சனசமூகநிலையம் தீர்மானித்துள்ளது.

## திருவள்ளுவர் விழா கொண்டாடினர்

சுன்னாகம், திங்கள் கொல்லங்கலட்டிச் சைவ வித்தியாசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை பிற்பகல் தலைமையாசிரியர் திரு. ஆ காசிநாதர் தலைமையில் திருவள்ளுவர் விழாக் கொண்டாடப்பட்டது. மகாஜனக் கல்லூரி ஆசிரியர் பண்டிதர் திரு. செ கதிரேசர் பிள்ளை "வள்ளுவரும் வாய்மையும்" பற்றி உரையாற்றினார். செல்வியர்: வ. இராஜேஸ்வரி; வே. புஷ்பராணி ஆகியோரின் இன்னிசை விருந்தும் இடம்பெற்றன. பிரமஸ்ரீ இ. சபாரத்தினஐயர் நன்றி தெரிவித்துப்பேசினர்.

## யங்ரேயல் வெற்றி

காங்கேசன்துறை, திங்கள் காங்கேசன்துறை யங்ரேயல் விளையாட்டுக்கழகத்திற்கும் காங்கேசன்துறைப் பொலிஸ் விளையாட்டுக் கோஷ்டிக்குமிடையில் காங்கேசன்துறைப் பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான ஒரு இன்னிங்ஸ் கிரிக்கெட் போட்டியில் யங்ரேயல் விளையாட்டுக்கழகம் 58 ஓட்டங்களால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ரேயல் விளையாட்டுக்கழகம் 133 ஓட்டங்களையும் பொலிஸ் கோஷ்டி 75 ஓட்டங்களையும் பெற்றனர்.

## கத்தோலிக்க கருத்தரங்கு

பருத்தித்துறை, திங்கள் இம்மாதம் 28-ம் திகதி அச்சுவேலி அர்ச். தெரேசா கன்னியர் மடத்தில் கத்தோலிக்க மத கருத்தரங்கு நடைபெறவிருக்கிறது.

வண. பிதா. ஜி. கி. பாலசுந்தரம் தலைமையில் நடக்கவிருக்கும் இக்கருத்தரங்கில் கத்தோலிக்க மதத்தைப் பாதிக்கக்கூடிய இன்றைய பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராயப்படுமாம். ஆண்டுதோறும் இக்கருத்தரங்கு நடைபெறுகிறது.

## பல்லேகலேத் தொழிற்சாலையில் ஆய்வு

கோட்டை, திங்கள் பல்லேகலேத் தொழிற்சாலையில் சில உற்பத்தி வேலைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

ஏலக்காய், மிளகு ஆகியவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு வாசனைப் பொருட்கள் தயாரிக்கப்படவிருக்கின்றன. இவற்றிலிருந்து சாறு எடுத்து அதை ஏற்றுமதி செய்வது குறித்தும் ஆராய்ச்சி செய்யப்படுகிறது. பேராதனையைச் சேர்ந்த சில ஆராய்ச்சியாளர்கள் இந்த ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

## மீண்டும் தட்டுப்பாடு

அம்பன், திங்கள் பருத்தித்துறை நகர்ப்புறத்தில் சீனித் தட்டுப்பாடு திரும்பவும் ஏற்பட்டுள்ளது தனியார் கடைகளில் ஓர் ஆளுக்கு அரை றாத்தல் வீதமே வழங்கப்படுகிறது மக்கள் கடையில் இரண்டு றாத்தல் வீதம் வழங்கப்படுகிறது தனியார்கடைகளுக்குக் கட்டுறவுச் சமாசம் குறைந்தளவு சீனியை வழங்கியுள்ளதாலேயே தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதெனத் தெரியவருகிறது.



ஆவரங்கால் நெதடிஸ்த மிஷன் பாடசாலையில் 25 வருடங்கள் தலைமையாசிரியராயிருந்து ஓய்வுபெற்றுள்ள திரு. ஜே ஞ. தம்பி ஐயா.

அன்னார் ஓய்வுபெற்றதையடுத்து அவருக்குப் பெற்றோரும் பழைய மாணவரும் மற்றும் ஆசிரியர்களும் மாணவர்களும் தனித்தனி பிரியாவிடை அளித்துப் பொன்னாடையும் போர்த்துக் கௌரவித்தனர்

இவர் தலைமையாசிரியராகவரும்போது 5-ம்வகுப்புடன் இருந்த இப்பாடசாலையைத் தனது விடாமுயற்சியினால் எஸ். எஸ். ஸி. வரை உயர்த்தி வறுமையினால் கஷ்டப்படும் மாணவர்கள் தூர இடங்களுக்கு சென்று படிக்கவசதியற்றிருந்த நேரத்தில் அவர்களது வாழ்வில் முன்னேற்றமடையச்செய்தார் அன்றியும் அவர் ஆசிரியர்க்கு ஆசிரியராயும் தந்தையுமாய் ஊரவர்களுடன் ஒன்றித்துப் பெருமதிப்புப் பெற்றார். பாடசாலை வளர்ச்சியுடன் கட்டிடங்களையும் பொருள் சேகரித்துப் பெரிதாக்கியும், உபகரணவசதிகள் பல செய்தும் பாடசாலை இப்பகுதியில் ஒரு விசேஷ பாடசாலையாக விளங்கவைத்துள்ளார்

பொ. வேலுப்பிள்ளை
(தலைமை ஆசிரியர்

ட்ருடோதிருமணம்

## பெண்கள் கவலை!

ஒட்டாவா, மார்ச் 15 இதுவரைகாலமும் பிரமச்சாரியாக இருந்துவந்து திருமணம் முடித்துக்கொண்ட கனடா பிரதமர் ட்ருடோவுக்கு பெண்கள் வட்டாரங்களில் எதிர்ப்புக் கிளம்பியிருக்கின்றது. வாலஸ்பேர்க் பெண்கள் உயர்நிலைப்பள்ளியில் பெண் மாணவிகள் இது குறித்து துக்கம் கொண்டாடினார்கள். 52 வயதான திரு. ட்ருடோ பிரம்மச்சாரிகள் பட்டியலிலிருந்து விலகிக்கொள்வதற்கு துக்கம்தெரிவிக்கும் முகமாக இந்தக் கல்லூரியில் கனேடியகொடி அரைக்கம்பத்தில் பறக்கவிடப்பட்டிருந்தது. பிரதமர் ட்ருடோ 22 வயதான மார்கரட் சின்கிலயார் என்ற பெண்ணை அண்மையில் திடீர் திருமணம் புரிந்து கொண்டார்

## குழந்தைகளின் பால்மாபெற தாய்மார் கஷ்டம்

முல்லைத்தீவு திங்கள் முல்லைத்தீவு அரசினர் ஆஸ்பத்திரியில் வழங்கப்படும் இலவசமாவைப் பெறுவதில் தாய்மார் கஷ்டப்படுகின்றனர். 5வயதுக்குட்பட்ட சகல பிள்ளைகளையும் இலவசமாவைப் பெற ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்ல வேண்டுமாம். இதுவரை காலமும் இல்லாத இச்சட்டத்தினால் பல தாய்மார்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நிர்ணயசபை

# ஸ்ரீலங்கா தன்னாதிக்கமுள்ள சுதந்திரமான குடியரசு!

## பிரேரணை நிறைவேறியது

கொழும்பு, திங்கள் ஸ்ரீலங்கா சுதந்திரமான இறைமை கொண்ட தன்னாதிக்கமுள்ள ஓர் குடியரசாக வேண்டுமென்ற டாக்டர் கொல்வின் ஆர் டி சில்வாவின் பிரேரணை இன்று அரசியல் நிர்ணயசபையில் பலத்த கரகோஷத்துக்கு மத்தியில் ஏகமனதாக வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது அரசாங்க கட்சி உறுப்பினர்களுடன், யு என் பி, தமிழரசுக்கட்சி அங்கத்தவர்களும் தீர்மானம் நிறைவேறியபோது பலத்த கரகோஷம் செய்தனர்.

டாக்டர் கொல்வின் ஆர். டி சில்வா இன்று இரண்டாவது அடிப்படைத் தீர்மானமான ஒற்றையாட்சி சம்பந்தமான பிரேரணையைச் சமர்ப்பித்தார். புதிய குடியரசு சோஷலிஸத்தை அடைவதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று டாக்டர் கொல்வின் உறுதிகூறினர்.

டாக்டர் கொல்வின் பேசுகையில் கூறியதாவது: 1949ம் ஆண்டிலிருந்து தமிழரசுக் கட்சி தமிழ்பேசும் மக்களிடம் சமஷ்டி பற்றி பேசி வந்த போதிலும், திட்டவட்டமாக எதையும் கருமல், கற்பனைலோக சமஷ்டி யொன்றையே படைத்து வந்துள்ளார்கள். இப்போது தான் முதல் தடவையாக சமஷ்டிபற்றி தேசிய சபையில் திட்டவட்டமாக ஆராய்ந்து முடிவு செய்வதற்கு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இந்த சமஷ்டி முறை எமக்குப் புதிதல்ல. முன்னர் இப்படியானமுறை இருந்து வந்திருக்கிறது. இந்தச் சிறிய நாட்டை பல பிரிவுகளாக்குவது நல்லதா என்பது யோசிக்க வேண்டிய விஷயம் எனக்கோ அரசுக்கோ தமிழ்-சிங்கள மக்கள் என்ற பேதம் இடையாது இந் நாட்டு மக்கள் எல்லாரும் ஒரே இன மக்களாக வாழ வேண்டுமென்பதே எமது நோக்கம்.

முல்லைத்தீவு இரட்டைக் கொலை

## சந்தேக நபருக்கு தொடர்ந்து றிமாண்ட்

முல்லைத்தீவு, திங்கள் முல்லைத்தீவு இரட்டைக் கொலை சம்பந்தமாகச் சந்தேகத்தின்மீது கைதுசெய்யப்பட்ட வட்டுவாகல் வாசியான ஆறுமுகம் கனகசிங்கத்தை இம்மாதம் 26-ம் திகதிவரை தொடர்ந்து றிமாண்டில் வைக்குமாறு முல்லைத்தீவு பதில் நீதிபதி திரு. வி. என். றெஜினோல்ட் உத்தரவிட்டார்.

சிவகாமி மாரியப்பர், மாணிக்கம் சித்திரவேலு ஆகிய இருவரும் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானது சம்பந்தமாகவும் மற்றிருவரான த. தில்லையம்பலம், வே. சின்னத்தம்பி ஆகியோர் துப்பாக்கிச் சூட்டுக் காயமுற்றது சம்பந்தமாகவும் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த பிரஸ்தாப சந்தேக நபர் நீதிபதிமுன் மீண்டும் ஆஜர் செய்யப்பட்டபோது, தொடர்ந்து அவரை றிமாண்டில் வைக்க உத்தரவிடப்பட்டது.

## இரு எதிரிகளுக்குச் சிறைத்தண்டனை

கண்டாவளை கொலைமுயற்சி வழக்கில் தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்வாய் கண்டாவளை கொலை முயற்சி வழக்கில் முதலாம் எதிரிக்கு மூன்று வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் இரண்டாம் எதிரிக்கு இரண்டு வருடக் கடூழியச் சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டது.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் திரு ஜீ ச விரமந்திரி முன்னிலையில் இவ்வழக்கு கடந்த நான்கு தினங்களாக விசாரணை செய்யப்பட்டுவந்தது.

1969ம் ஆண்டு மே மாதம் 7ந் திகதி கந்தையா கந்தசாமி என்பவர் செல்லையா, வைரமுத்து, சிதம்பரப்பிள்ளை தவராசா, வேலுப்பிள்ளை சேனாதிராசா ஆகியோரைச் சுட்டுக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் செல்லையா கதிரவேலு என்பவர் அதற்கு உடந்தையாக இருந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

விசாரணை முடிவில் முதலாம் எதிரிக்கு மூன்று வருடச் சிறைத்தண்டனையும் இரண்டாம் எதிரிக்கு இரண்டு வருடச் சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார்.

எதிரிகள் சார்பில் புறக்டர் திரு செ. கதிர்காமசேகரரின் அனுசரணையுடன் அட்வகேட் கே. ஜெயக்கொடி ஆஜரானார்.

## ஒற்றையாட்சியா, சமஷ்டியா? இன்று விவாதம்!

கொழும்பு, செவ் ஒற்றையாட்சியா? சமஷ்டியா? புதிய அரசியலமைப்பில் இந்த இரண்டில் எந்த வகையான ஆட்சி அமைய வேண்டுமென்ற இந்த திருத்தப் பிரேரணை இன்று அரசியல் நிர்ணய சபையில் விவாதிக்கப்படும்.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த உடுவில் தொகுதி உறுப்பினர் திரு வி தர்மலிங்கம் நேற்று அரசியல் நிர்ணய சபையில் சமஷ்டியாட்சி அமைப்பு முறை இலங்கையில் இருக்க வேண்டுமென்ற திருத்தப் பிரேரணையை உத்தியோக பூர்வமாகச் சமர்ப்பித்தார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி அரசியல் அலுவல் அமைச்சர் டாக்டர் கொல்வினிடம் 21-11-70-ல் சமர்ப்பித்திருந்த மகஜரில் குறிப்பிட்ட படியே இந்தத் திருத்தப் பிரேரணையை திரு வி தர்மலிங்கம் இன்று சமர்ப்பித்தார்.

இந்தத் திருத்தப் பிரேரணை சம்பந்தமான விவாதம் இன்று நடைபெறும்.

## "ஸ்ரீலங்கா பிரகடனம் எந்த நன்மையையும் தராது உடன்படிக்கை ஏற்படவேண்டும்"

செல்வநாயகம்

கொழும்பு, திங் புதிய ஸ்ரீலங்கா பிரகடனம் எந்த நன்மையையும் கொண்டுவரப் போவதில்லை என்று தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ் ஜே வி செல்வநாயகம் இன்று அரசியல் நிர்ணய சபைக் கூட்டத்தில் பேசுகையில் கூறினர்.

அரசியல் நிர்ணயசபை கட்சி அடிப்படையில் செயல்படுமானல் தமிழ் பேசும் மக்களுக்கு எவ்வித நன்மையும் கிடைக்கமாட்டாதென்றும் அவர் சொன்னர்.

அவர் மேலும் பேசுகையில் அரசியல் நிர்ணயசபை கட்சி அடிப்படையில் செயல்படக் கூடாதென்றும் ஆட்சியாளருக்கும் நமக்குமிடையில் ஒரு உடன்படிக்கை ஏற்பட வேண்டுமென்றும் வற்புறுத்தினர்.

அப்படி உடன்படிக்கை ஏற்படாமல் நாம் இந்தக் கூட்டங்களில் கலந்து கொள்வது காலத்தை விரயமாக்குவதாகவே முடியுமென்றும் அவர் சொன்னர். மொழி, பிரஜாவுரிமைப் பிரச்னை போன்றவை தீர்க்கப்பட வேண்டிய முக்கிய பிரச்னைகளாகுமென்றும் அவர் சொன்னர்.

## தமிழ்நாட்டில் மந்திரிசபை நேற்று பதவி ஏற்றது!

சென்னை, மார்ச் 15 திரு மு கருணாநிதியின் தலைமையிலான பதினான்கு உறுப்பினர்களைக் கொண்ட தமிழ்நாடு மந்திரி சபை இன்று மாலையில் பதவியேற்றுக்கொண்டது.

பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் நடைபெற்ற இவ் வைபவத்தில் முதல் அமைச்சருக்கும் இதர அமைச்சர்களுக்கும் தமிழ்நாடு கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் பதவிப்பிரமாணமும் இரகசியக் காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார். தமிழிலேயே எல்லா அமைச்சர்களும் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்கள்.

பதவியேற்று முடிந்ததும் மண்டபத்துக்கு வெளியே திரண்டிருந்த மக்கள் முன் திரு கருணாநிதி நன்றிதெரிவித்துப் பேசினர்.

## திருச்செந்தூரிலும் தி. மு. க. வெற்றி

சென்னை, மார்ச் 15 திருச்செந்தூர்த் தொகுதியிலிருந்து திராவிட முன்னேற்றக் கழக வேட்பாளர் திரு. எம். எஸ். சிவசாமி லோகசபைக்குத்தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவருடன் போட்டியிட்ட சுதந்திராக் கட்சியைச் சேர்ந்த டாக்டர் மத்தியாசைவிட திரு. சிவசாமி 26 அதிகப்படியான வாக்குகளால் வெற்றியீட்டினர். முன்னர் இத்தொகுதி சுதந்திராக் கட்சிக்கு இருந்தது.

இவர் கட்டுப்பணம் இழந்தார்.

வாக்குகள் மீண்டும் மீண்டும் எண்ணப்பட்டதால் இன்று மாலைதான் முடிவுகள் அறிவிக்கப்பட்டன.

### வாக்குவிபரம்

எம். எஸ். சிவசாமி (தி மு க) 2,2783

டாக்டர் மத்தியாஸ் (சுதந்திரா) 2,2757

பொன்னையா (சுயேச்சை) 5,489

### இன்று சங்காபிஷேகம்

யாழ்ப்பாணம், செவ்வாய் வட்டுக்கோட்டை தெல்லிப்பிராய் முருகமூர்த்தி கோவிலில் நவோத்திர சகஸ்ர சங்காபிஷேகம் இன்று ஆரம்பமாகின்றது. நாளை இரவு 'ஆறுமுகமான பொருள்' என்னும் பொருள் பற்றி அருட்கவி சீ விநாசித்தம்பி பிரசங்கம் நிகழ்த்துவார்.

### வேலைநிறுத்தம்

யாழ்ப்பாணம், செவ் ஐக்கிய இலங்கை ஸ்தலஸ்தாபன தொழிலாளர் சங்கத்தின் தலைமை அலுவலகத்தை அனுராதபுரம் பாதுகாப்புச் சபையினர் ... இடம் ஒதுக்கிக் கொடுக்காமல் உடைத்ததாகவும் இதைக் கண்டித்து அனுராதபுரம் சுகாதாரப் பகுதி தொழிலாளர் வேலைநிறுத்தம் ... என்றும் சங்கத்தினர் அறிவிக்கின்றனர்.

### மேற்கு...

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

போவதில்லையென்று உறுதியாகத் தவர்களுக்கு பாங்களா காங்கிரஸ் தலைவர் அஜேய் முகர்ஜி குமார் தெரிவித்துள்ளார்.

மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சியைத்தாம் ஆதரிக்கமாட்டோமென்றும் இந்திரா காங்கிரஸ்கட்சியையே தாம் ஆதரிப்போமென்றும் அவர்களுக்கு மேற்குவங்க நிஜலிங்கப்பா காங்கிரஸ் காரியதரிசி அறிவித்துள்ளார்.

### புதிய லோகசபை 7ல் கூடும்

புதுடில்லி, மார்ச் 15 இந்திய லோகசபைக்கு தெரிவுசெய்யப்பட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் வெள்ளிக்கிழமை கூடுவார்கள். புதிய லோகசபை அடுத்தமாதம் 7ம் திகதி கூடுமென அறியப்படுகிறது.

இந்திரா காங்கிரஸ் காரிய கமிட்டி இன்று கூடி தமது கட்சியின் எதிர்கால பொறுப்புகள் குறித்து ஆராய்ந்தது.

### மேலும் ஒருவர் மரணம்

கண்டி, திங்கள் அசலமுல்ல கைக்குண்டு வீச்சில் காயமுற்ற தெலுந்தெனியா - தலங்காகு மகா வித்தியாலயத்தில் கல்வி பயின்றுவந்த மாணவனை எல். ரி. அல்பெனிஸ் என்பவரும் மரணமடைந்தவர்களில் ஒருவராவர். இம்மாணவன் கண்டி ஆஸ்பத்திரியில் மரணமானர்.

இப் பத்திரிகை "ஈழநாடு லிமிடெட்" ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் ... வீதி 4-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு மார்ச் மாதம் 16-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org